வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 31.01.2022 திங்கட்கிழமை இதழ் : 57 பக்கங்கள் : 16




# 13ஐ இடைக்காலத் தீர்வாக விடுதலை புலிகள் ஏற்றனர்!

## அடேல் பாலசிங்கம் தனது நூலில் விபரிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 31

தமிழீழ விடுதலைப் புலிகள் மாகாண சபையை நிராகரிக்கவில்லை. மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைப் பதிவு செய்ததே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத்தான் என்று தமிழர் விவகாரத்தில் மனித உரிமைகள் விடயத்தை ஜெனிவாவில் புலிகள் காலத்திலிருந்து கையாள்பவர்களில் ஒரு வரும் பிரான்ஸ் மனித உரிமைகள் மையத்தின் இயக்குநரும் ஆய்வாளரு மான ச. வி. கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

15

# மாகாண சபை ஒழிப்பு தவறான செய்தியாம்!

## பீரிஸ் கூறினார் என்கிறார் சுமந்திரன்!

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணத்தில் நீதி அமைச்சரையும் வெளிவிவ கார அமைச்சரையும் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத் தது. இதன்போது சிங்கள பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியான மாகாண சபை முறைமை புதிய அர சியல் அமைப்பில் இல்லை என்ற விடயம் தொடர் பாக கேட்டேன். அவர்கள் அதனை அடியோடு

15

# நாவற்குழியில் விபத்து; பெண் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 31

நாவற்குழியில் பேருந் தில் இருந்து இறங்கிய பெண் தடுமாறி விழுந்த தில் பஸ்ஸின் சில்லு தலை மீதேறியதில் சம்பவ இடத் திலேயே உயிரிழந்தார்.

நேற்று முற்பகல் வேளை இடம்பெற்ற இந்த விபத்துக் குறித்து மேலும் அறியவருவதாவது,

15

# இன்னும் ஏழு மாதங்களில் நிலைமை தலைகீழாகும்!

## கூறுகிறார் மஹிந்தானந்த

கொழும்பு, ஜன. 31

"அரசுக்கு எதிராக தற் போது விமர்சனங்கள் குவிந்தாலும், இன்னும் ஏழு மாதங்களில் இந் நிலைமை தலைகீழாக மாறும் என்பது உறுதி. அதேபோல எதிரணி களின் பகல் கனவும் பலிக் காது." - என்று அமைச் சர் மஹிந்தானந்த அளுத் கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறி யவை வருமாறு:

இன்று சமூக

15

# நாடு முழுவதும் ஒமைக்ரோன் பெப்ரவரி இறுதிக்குள் பரவும்!

கொழும்பு, ஜன. 31

நாட்டில் ஏற்கனவே டெல்டா வைரஸ் பரவிக் கொண்டுள்ள நிலையில் அதனை விடவும் பல மடங்கு வேகமாக ஒமைக்ரோன் வைரஸ் பரவுவதை அவதா னிக்க முடிகின்றது. இந்த நிலைமை தொடருமானால் பெப்ரவரி மாதம் இறுதிக்குள் நாடு முழுவதும் ஒமைக்ரோன் வைரஸ் பரவும் அபாயம் உள்ள தாக சுகாதார பணியகத்தின் பிரதி சுகாதார பணிப்பாளர் விசேட மருத்துவர் ஹேமந்த

15

# டெங்கு அபாய மாவட்டமாக யாழ்ப்பாணமும் அறிவிப்பு!

கொழும்பு, ஜன. 31

நாட்டில் டெங்கு நோய் பரவும் அபாய முள்ள 12 மாவட்டங் களின் 81 பிரதேச செய லாளர் பிரிவுகள் அடை யாளம் காணப்பட் டுள்ளன என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு

15

# மனித உரிமை பேரவைக்கு த. தே. கூட்டமைப்பு கடிதம்

வவுனியா, ஜன. 31

தற்போதைய நிலைமைகளை ஐக்கியநாடுகள் சபை யின் மனித உரிமை பேரவைக்கு தெளிவுபடுத்தும் முக மாக அறிக்கையொன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் தயார் செய்யப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற் றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

15

# கிடைக்காத ஒன்றைப் பெறுவதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சி

## நீதியமைச்சர் அலி சப்ரி குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜன. 31

கிடைக்காத விடயம் ஒன்றைப் பெறுவதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றார் கள் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடத் திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில அரசியல்வாதிகள் இங்குள்ள இளைஞர் யுவதிகளை பிழையாக வழி நடத்துகிறார்கள். கிடைக்காது என

15

# யாழில் நேற்று 16 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணத்தில் நேற்று 16 கொரோனா தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம்

15



# மாகாண சபை முறையை எதிர்த்து யாழில் பேரணி!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி நடத்தியது

யாழ்ப்பாணம், ஜன. 31

13 ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்றை முன்னெடுத்தது.

"ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஐ நிராகரிப்போம்" எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப் பட்ட இந்தப் பேரணி நல்லூர்

15

# பலாலி சர்வதேச விமான நிலையம் மூடப்பட காரணம் கொரோனாதான்

## யாழ்ப்பாணத்தில் கூறினார் பீரிஸ்

யாழ்ப்பாணம், ஜன. 31

பலாலி சர்வதேச விமான நிலையம் நாட் டில் ஏற்பட்ட கொரோனா நிலை காரணமா கவே மூடப்பட்டுள்ளதே தவிர வேறெந்த அர சியல் நோக்கங்களுக்குமாக மூடப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலா

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

மாகாண சபைகளை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், அவர்கள் பலம்வாய்ந்த ஓர் ஆயுத அமைப்பாக இருந்ததால் தாம் அடைய நினைக்கின்ற தீர்வை அடையலாம் என்ற நம்பிக்கையில் இருந்ததாகவும் இந்தப் பத்தியில் முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

அதனைப் படித்த நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து ஒரு வீடியோ பதிவு ஒன்றை அனுப்பி, நீங்கள் குறிப்பிடுவது தவறு என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

தீவுப்பகுதியின் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த அவர், இந்த ஊர்க்குருவியின் தீவிர வாசகர்.

அவர் அனுப்பியிருந்த அந்த வீடியோவை முழுமையாகப் பார்த்து முடித்துவிட்டபோது பல விடயங்களில் தெளிவு பிறந்தது.

பிரான்ஸில் வாழும் ச. வி. கிருபாகரன், ஒரு மனித உரிமைப் போராளி. அவர் பற்றி முன்னரும் ஒருதடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

விடுதலைப் புலிகளுக்கு முன்னரான காலத்தில், தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து தமிழர் மனித உரிமை கழகம் என்ற பெயரில் தனி ஒருவனாக இயங்கிய போராளி. ஜெனிவாவில் அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி மட்டுமல்ல, அரச தரப்பினரால் புலிகள்மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் தனி ஒரு மனிதனாக இருந்து எதிர்கொண்ட போராளி அவர்.

புலிகளுக்கு பின்னரான காலத்திலும் இன்றுவரை ஜெனிவாவில் தமிழ்மக்கள்மீது நடத்தப்பட்டது இனப் படுகொலை என்பதை நிரூபிக்கவேண்டும் என்பதற்காகப் போராடிக்கொண்டிருப்பவர். பல சர்வதேச பிரதிநிதிகளை சந்தித்தவர். சர்வதேசத்தை எப்படி அணுகவேண்டும் என்பதையும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தனது செயல்பாடுகள் மூலம் அறிந்து வைத்திருப்பவர்.

நண்பர் அனுப்பிய அந்த வீடியோவில் அவர் இந்த பதின்மூன்று பற்றியும் மாகாண சபை பற்றியும் ஊடகர் எஸ். கே. ராஜனுக்கு வழங்கிய பேட்டி அது.

அந்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ள ஒரு விசயம் கவனத்திற்குரியது.

மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருந்தார்கள் என்றும், மாகாண சபைகளை ஒரு நிரந்தர தீர்வாக அல்லாமல், இடைக்கால தீர்வாக ஏற்றுக்கொள்ள இருந்தார்கள் என்றும் அவர் தகவல் சொன்னார்.

அவர் அந்தத் தகவலை வேறு எங்கிருந்தாவது பெற்று சொல்லியிருந்தால் அது கவனத்தைப் பெற்றிருக்காது. விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவியும் மகளிர் போராளியுமான அடேல் பாலசிங்கம் எழுதிய The Will to Freedom: an Inside View of Tamil Resistance என்ற நூலில் அவர் தெரிவித்துள்ள தகவலையே அவர் தெரிவித்தார். அந்த நூலில் 257ஆம் பக்கத்தில் இருப்பதாக அவர் வாசித்துக்கட்டிய அந்த பகுதியில், மாகாண சபைகளை நிரந்தர தீர்வாக அன்றி, ஓர் இடைக்கால தீர்வாக ஏற்றுக்கொள்ள புலிகள் தயாராக இருந்தனரெனவும், வடக்கு - கிழக்கு மாகாண சபையில் வரதராஜப்பெருமாள் முதலமைச்சராக இருந்தபோது, அதனைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்தினால், அதில் போட்டியிட தயாராக இருப்பதாக அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு தெரிவித்திருந்ததாகவும் அடேல் எழுதியிருக்கிறார்.

இந்த நூல் வெளிவந்தது இரண்டாயிரத்து ஓராம் ஆண்டில். அவர் எழுதிய அந்த தகவல் தவறானதாக இருந்திருந்தால் புலிகள் அதனை முற்றாக மறுத்திருப்பார்கள். அப்படி எங்கும் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் இல்லை.

ஆக, தனிநாடுதான் ஒரே தீர்வு என்று போராடிக்கொண்டிருந்த புலிகள் கூட ஒரு கட்டத்தில் இடைக்காலத் தீர்வாக மாகாண சபைகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்திருக்கின்றனர்.

ஆனால், மாகாண சபைகளை ஏற்றுக்கொள்வது ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும் என்பதால் அதனை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்று போராடுகின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அதனை - அதாவது, ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டுவிட்டால் பின்னர் சுயாட்சியைக் கோருகின்ற உரிமையை இழந்துவிடுவோம் என்று வாதிட்டுக்கொண்டிருக்கின்றது.

அதுமாத்திரமல்ல, புலிகளைப் போல, ஓர் இடைக் காலத் தீர்வாக மாகாணசபைகளை ஏற்றுக்கொண்டாலும் தமிழ்களின் நிரந்தர தீர்வு சமஷ்டிதான் என்று கூறும் கூட்டமைப்பையும் மற்றைய கட்சிகளையும் இந்தியாவின் அடிவருடிகள் என்கின்றது. இது புலிகளையும் நோக்கி முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்!

**- ஊர்க்குருவி**

# சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்தவேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று பிரகடனம்

யாழ்ப்பாணம், ஜன. 31

“வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தில், தமிழ்த் தேச அங்கீகாரத்தையும் - அதனுடைய தனித்துவமான இறைமையையும் - சுயநிர்ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக் கூடிய ‘சமஷ்டி’ அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும்.”

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று வெளியிட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்துக்கு எதிராக நேற்று யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நடத்தப்பட்ட பேரணியின் இறுதியில் கிட்டு பூங்காவில் வைத்து பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது.

அதன் முழு விவரம் வருமாறு:

“தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை 13 ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிப்போம்” என்ற நோக்கத்துடன் தமிழ் மக்களினதும், வெகுசன அமைப்புக்களினதும் பங்குபற்றலுடன் நடைபெறும் தமிழ் தேசிய அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தும் போராட்டத்தில், 2022 தை 30 இன்று, கிட்டு பூங்காவில் நாம் அனைவரும் திரண்டுள்ளோம்.

சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ்த் தேசமானது - தனது அடிப்படையான அரசியல் உரிமைகளான வடக்கு கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம் அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்துக்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் இத் தொடர் போராட்டம் வலியுறுத்திக் கூற விரும்புகின்றது.

சிங்கள - பௌத்த பெரும்பான்மை மக்களின் ஏகோபித்த வாக்குகளால் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள இன்றைய அரசாங்கத்தால் இலங்கைக்கான நான்காவது அரசியலமைப்பு கொண்டுவரப்படவுள்ளது. அதை இந்த வருடத்துக்குள் நிறைவேற்றவுள்ளதாக இவ்வரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டும் உள்ளது. அது இறுக்கமான ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாகவே அமையும் என்பதையும், அரசாங்கம் உறுதிப்படக் கூறியுள்ளது. இந்த அரசியலமைப்பை ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றுவதற்குரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் இந்த அரசாங்கம் கொண்டுள்ளது. இலங்கையில் கொண்டுவரப்பட்ட மூன்று அரசியலமைப்புக்களும் இதே போன்றதொரு சிங்கள பெரும்பான்மைப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டே நிறைவேற்றப்பட்டிருந்தது. அச்சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழ்த் தலைமைகள் அந்த ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்களை எதிர்த்திருந்ததுடன், வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம் அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி வந்ததன் விளைவாகவே, தமிழர்களுக்கு இனப்பிரச்னையொன்று உண்டு என்னும் விடயத் தைத் தக்கவைக்கக்கூடியதாக இருந்தது.

இவ்வாறிருக்க, 1980 களில் இலங்கையை மையமாகக் கொண்டிருந்த அமெரிக்க - இந்திய பூகோளப்போட்டி காரணமாகவே இந்தியா தனது நலனை அடைவதற்காக தமிழர்களின் இனப்பிரச்னையைக் கையிலெடுத்திருந்தது. 1987 இல் இலங்கையானது, இந்திய நலன்சார்ந்து செயற்பட தயாரான நிலையில், இந்தியா தனது தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்தி, சிங்கள தரப்புடன் உடன்பட்ட பின்னர், எந்த ஒற்றையாட்சிக் கெதிராக தமிழ்த் தரப்பை பயன்படுத்தியதோ, அதே ஒற்றையாட்சிக்குள்ளான 13 ஆம் திருத்தத்தையே தமிழ்க்களுக்கான தீர்வாக இலங்கை அரசு முன்வைத்திருந்த நிலையில், தமிழ்த் தரப்பை இந்தியா கைவிட்டிருந்தது. இந்நிலையில் அப்போதிருந்த தமிழ்த் தரப்புகளாலும் ஒற்றையாட்சிக் குட்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டம் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேர்மையான தலைமைத்துவத்தின் காரணமாக ஒற்றையாட்சிக்குள் முடக்கும் செயல்பாடுகள் அனைத்தும் தடுக்கப்பட்டிருந்தது. 2005 இன் பின்னர், இந்திய சீனா பூகோளப்போட்டி மீண்டும் இலங்கையில் உருவாகியிருந்த பின்னணியிலேயே ஓர் இனப்படுகொலையூடாக போராட்டம் மௌனிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், இந்தியா மீண்டும் தனது ஆதிக்கத்திலுள்ள தமிழ்த் தரப்புக்களைப் பயன்படுத்தி, தமிழ் அரசியலை ஒரு துருப்புச்சீட்டாகக் கையாண்டு இலங்கை அரசோடு பேரம்பேசி வருகின்றது. இலங்கை, சீனாவின் விவகாரத்தில் இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் செயற்படுமானால், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ் தரப்புக்களைப் பயன்படுத்தி, தமிழரின் அரசியலை ஒற்றையாட்சிக்குள்ளான 13ஆம் திருத்தத்திற்குள் முடக்குவதற்கும் இணங்கியுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே, இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ்த் தரப்புகளான இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எவ்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி உள்ளிட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் இணைந்து 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி கூட்டாக கையொப்பமிட்ட கடிதத்தை 18-01-2022 அன்று இந்திய தூதுவரிடம் கையளித்துள்ளனர்.

இதன்மூலம், 13 ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள சரத்துக்கள் புதிய அரசியலமைப்பிலும் உள்வாங்கப்படும் பட்சத்தில், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட வடக்கு-கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், புதிய ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு ஆதரவு வழங்குவதனூடாக, தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்ற நிலைமையையே உருவாக்கி, நாட்டிலுள்ள அனைத்து இனங்களும் ஏற்றுக் கொண்ட ஒரு அரசியலமைப்பை உருவாக்கிவிட்டதாகவும், இனப்பிரச்னை இதனூடாக தீர்க்கப்பட்டு விட்டதாகவும் உலகுக்கு பறைசாற்றுவதற்கு தயாராகிறார்கள்.

இந்த ஆபத்திலிருந்து தமிழ்த் தேசத்தை மீட்டெடுப்பதற்கு, தமிழ்த் தேச மக்கள் அணிதிரள்வதன் ஊடாகவே தடுத்து நிறுத்த முடியும் என்னும் யாதார்த்தத்தை விளங்கிக் கொண்டு, இந்தத் தொடர் போராட்டம் பின்வருவனவற்றை பிரகடனப்படுத்துகிறது :-

- தமிழ்த் தேச மக்கள் தொடர்ச்சியாக ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை 70 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வந்திருக்கின்ற நிலையிலே, 2009 இல் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரும், ஒற்றையாட்சியை நிராகரித்தும், தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தைக் கோரியும் ஒவ்வொரு தேர்தல்களூடாகவும் தங்களது ஏகோபித்த ஆணையை வழங்கி வந்திருக்கிறார்கள்.

- வடக்கு கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசமும் - அதன் இறைமையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகிக்கப்படுகின்ற தீர்வுக்குப் பதிலாக - ஒற்றையாட்சிக்குள் இருக்கக் கூடிய ஒரு கட்டமைப்பாக (13 ஆம் திருத்தச் சட்டமாகவோ அல்லது வேறு வடிவத்திலோ) இருக்குமானால் அவ்வகையான செயல், தமிழ் மக்களுடைய ஆணைக்குத் துரோகம் இழைக்கும் வகையிலேயே அமையும் என்ற விடயத்தை இப்போராட்டம் பிரகடனப் படுத்துகிறது.

-தமிழ் மக்கள் - காலம் காலமாக வழங்கிவரும் தமிழ்த் தேச அங்கீகாரத்துக்குரிய ஆணையை மீறி, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தத்தையோ அல்லது வேறு எந்தவொரு திருத்தத்தையோ வலியுறுத்துகின்ற தரப்புக்கள், அம்முயற்சியை கைவிட வேண்டுமென இப்போராட்டமூடாக வலியுறுத்துகிறோம்.

- இந்திய அரசானது இலங்கையோடு நல்லுறவை பலப்படுத்திக்கொள்வதையோ அல்லது தனது பூகோள -அரசியல் நலன்களைப் பேணுவதையோ அல்லது தென் ஆசிய பிராந்திய வல்லரசாக தன்னை நிலைநிறுத்திக்கொள்வதையோ ஈழத்தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. இந்தியாவை எமது நட்புசக்தியாகவே கருதுகின்றோம். இந்தியாவின் தேசிய நலன்களைப் பேணுவதில் எமக்கு மிகுந்த விருப்பமும் அக்கறையும் ஈடுபாடும் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் தமது நட்பு சக்தியாக கருதும் இந்தியா, தனது பூகோள நலன்களைப் பூர்த்தி செய்வதற்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்கி, தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணிக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு கோருகின்றோம். (அ)

ஈழநாடு
Eelanadu
31.01.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்த எதிர்ப்பால் மக்களுக்கு?

13ஆவது திருத்தச் சட்டம் என்பது, சாதாரண மக்களில் பலர் அறியாத ஒன்று. சாதாரண குடிமகனிடம் சென்று 13 - தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள் என்று வினவினால் - அவர் பதில் சொல்ல முடியாமல் திணறுவார். ஆனால், அதே குடிமகனிடம், மாகாண சபை தொடர்பில் கேட்டால் - உடனே அவர் ஆர்வமாகப் பதில் சொல்லுவார். மாகாண சபை வேண்டுமா அல்லது வேண்டாமா என்று கேட்டால் - நிச்சயம் எந்தவொரு குடிமகனும் வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை. இதுதான் யதார்த்தம். ஏனெனில், மக்கள் எப்போது இருக்கின்ற விடயமொன்றை நிராகரிப்பார்கள் என்றால் - அதனையும் விடவும், சிறந்த ஒன்று அவர்களுக்கு முன்னால் இருக்கின்ற போதுதான், அவர்கள் ஒன்றை நிராகரிப்பார்கள். மேலும் மக்கள் மாகாண சபை தேர்தல்களில் ஏற்கனவே வாக்களித்து அதனை கையாளும் அரசியலை ஆதரித்திருக்கின்றனர். ஆனால், இன்று 13-பற்றி பேசுபவர்கள் நேர்மையாக பேசவில்லை. அதாவது, வெளிப்படையாக மாகாண சபை என்று சொல்லவில்லை? ஏனெனில், மாகாண சபை என்று வெளிப்படையாக கூறினால் - மக்கள் ஒருபோதுமே இதனை ஆதரிக்கமாட்டார்கள். இதன் காரணமாகவே மக்களுக்கு புதிர் போடும் வகையில் 13-எதிர்ப்பு என்னும் கோசத்தை சிலர் கையிலெடுத்திருக்கின்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) 13 எதிர்ப்பு என்னும் சுலோகத்தின் கீழ், யாழ்ப்பாணத்தில் ஆர்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளையில், சிங்கள பத்திரிகை ஒன்று, ஜனாதிபதி கோட்டாபயவின் புதிய அரசியல் யாப்பின் உள்ளடகத்தை வெளியிட்டிருக்கின்றது. அதாவது, குறித்த கலந்துரையாடலுக்கான வரைபில் - மாகாண சபை முறைமை இல்லை. அதாவது இந்த நாட்டுக்கு மாகாண சபை தேவையில்லை என்னும் அடிப்படையிலேயே புதிய அரசியல் யாப்பு யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. ஓரளவு தமிழ் மக்களுக்கு வாய்ப்பாக, வட, கிழக்கில் தமிழ் மக்களுக்கான குரலாக இருந்த மாகாண சபையையும் இல்லாமலாக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை இல்லாமலாக்கலாம் அது பிரச்னையில்லை என்பதுதான் 13 எதிர்ப்பின் பின்னாலுள்ள தீய திட்டம். இது தமிழ் மக்களுக்கு நன்மையானதா?

இவ்வாறான எதிர்ப்புக்கள் வாயிலாக தென்னிலங்கை கடும்போக்கு வாதிகளின் விருப்பங்கள் நிறைவு செய்யப்படுகின்றதா? ராவண பலய, பொது பல சேனா போன்ற இன்னும் பல தேசப்பற்றுள்ள சிங்கள தேசிய இயக்கங்கள் மாகாண சபையை இல்லாதொழிக்க வேண்டுமென்று குரலெழுப்பி வருகின்றன. இதற்கான வாய்ப்பு இப்போது கிடைத்திருப்பதாக அவர்கள் நம்புகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான், புதிய அரசியல் யாப்பின் முதல் வரைபில் மாகாண சபையை இல்லாதொழிப்பதற்கான யோசனையை முன்வைத்திருக்கின்றனர். இந்த யோசனையை சரியென்று வாதிடும் வகையில்தான், மேற்படி யாழ்ப்பாண ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருக்கின்றது.

அதேவேளை ஆறு கட்சிகள் இணைந்து எழுதிய கடிதத்தில் என்ன இருக்கின்றது என்பதை வாசிக்காமலேயே, சிவில் சமூக அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆறு கட்சிகளின் கடிதத்தில் எந்தவொரு இடத்திலும் 13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களின் பிரச்னைக்கான இறுதி அரசியல் தீர்வென்று குறிப்பிடப்படவில்லை. அதேவேளை, சமஷ்டிதான் தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வு என்பதும் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

உண்மையில் இந்தியாவை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு தந்திரோபாய நடவடிக்கையாக மட்டுமே இது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனைவிட இதற்கு எந்தவொரு முக்கியத்துவமும் இல்லை. மேலும், ஒரு கடிதத்தை எழுதியதுடன் புதுடில்லி உடனடியாக இலங்கையில் தலையீடு செய்யப் போவதுமில்லை. ஆனால், புதிய அரசியல் யாப்பின் மூலம் ஏற்கனவே இருக்கின்ற ஏற்பாடுகளையும் இல்லாதொழிக்க முற்படும்போது, அதனை தடுத்து நிறுத்துமாறு உடனடி வல்லரசான இந்தியாவிடம்தான், தமிழ் கட்சிகள் கோரிக்கை வைக்க முடியும். ஏனெனில், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற விடயமொன்றை நீக்குவது தொடர்பில் இந்தியா பாராமுகமாக இருக்கக்கூடாது - அதே வேளை தமிழ் மக்கள் சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கான தீர்வொன்றிற்கு இந்தியா உதவ வேண்டும். ஏனெனில் இந்தியா அதனை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது.

இந்தப் பின்னணியில்தான், ஆறு கட்சிகள் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தன. இதற்காக ஏன் ஆர்ப்பாட்டங்கள்? ஏன் இந்த ஆடம்பர செலவுகள்? இது தொடர்பில் விமர்சனங்கள் இருந்தால் ஒரு கூட்டத்தின் மூலம் அதனை வெளிப்படுத்தியிருக்கலாமே! ஆனால், இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நிச்சயம் தென்னிலங்கையின் இனவாதிகளை மகிழ்ச்சிப்படுத்தும். தமிழர்களும் தேவையில்லையென்று கூறுகின்ற ஒருவிடயத்தில், இந்தியா ஏன் தலையீடு செய்ய வேண்டுமென்று கேட்பதற்கு உதவும். இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொடவுக்கு இப்போது ஒரு நல்ல துருப்புச் சீட்டு கிடைத்திருக்கின்றது.

# வடக்கே இரு அமைச்சர்கள்!

**அலசுவது இராஜதந்திரி**

அரசாங்கத்தின் இரு முக்கிய அமைச்சர்கள் கடந்த சில தினங்களாக வட பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தனர். வடக்கே முப்பது வருட கால யுத்தத்தால் ஏராளமான மனிதாபிமானப் பிரச்னைகளை எதிர்கொண்டு இன்று அந்தப் பிரச்னைகளுக்கான தீர்வையும் தமக்கு நீதியையும் வேண்டி நிற்கும் வடபகுதி மக்களைப் பொறுத்தவரை இந்த இரு அமைச்சர்களின் விஜயமும் முக்கியமானதாகும்.

வட பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இரு அமைச்சர்களில் ஒருவர் நீதியமைச்சர் அலி சப்ரி, மற்றையவர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்.

வடக்கே காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் நீண்ட காலமாக நீதி விசாரணைகளின்றி தடத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோரின் உறவுகள் தமக்கு நீதி கோரி வடக்கே கடந்த சில தினங்களாக ஆர்பாட்டங்களை நடத்திவருகின்றனர்.

நாட்டில் நடமாடும் நீதிச்சேவையை ஆரம்பித்து வைப்பதனை நோக்கமாகக் கொண்டு, வடக்கிலிருந்தே குறிப்பிட்ட நீதிச்சேவையை ஆரம்பிக்கும் விதத்தில் நீதி அமைச்சர் அலி சப்ரி யாழ்ப்பாணம் சென்றுள்ளார். அவரின் நோக்கம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே. ஏனெனில், வடக்கு - கிழக்கிலேயே நாட்டில் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுக்கு நாட்டில் முறையில் பலத்த சவால்கள் ஏற்பட்டிருந்தன.

பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் உட்பட வடக்கு - கிழக்கில் இயங்கிய அரச நிறுவனங்கள் அனைத்துமே முடக்கப்பட்டிருந்தன. பொலிஸ் அதிகாரிகள் மட்டுமல்ல. நீதித்துறை சார்ந்தவர்கள், அரச அதிபர்கள், கூடவே பாடசாலை அதிபர்கள் அப்பாவிப் பொதுமக்கள் எனப்பலரும் கொடிய யுத்தத்திற்கு இரையாகியிருந்தனர்.

இத்தகைய பின்னணியில் சட்டம், ஒழுங்கு, சிவில் நிர்வாகம் என்பவற்றை வடக்கு - கிழக்கு பகுதிகளில் குறிப்பாக வட பகுதியில் மீளவும் தோற்றுவிப்பதற்கு அரசு யுத்தம் முடிவுற்றதுமே முன்னுரிமை வழங்கிய போதிலும் யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்குவதிலும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதிலும் அரசு எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளதென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

நீதியமைச்சர் அலி சப்ரி வடக்கே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை நோக்கி அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக போராடுவதால் எவ்வித பயனுமில்லை எனக்கூறியிருப்பதோடு பேச்சுக்கள் மூலமாகவே எதனையும் சாதிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நீதி அமைச்சரின் இந்தக் கூற்று அவரும் அவரது அரசாங்கமும் எவ்வளவு தூரம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிதள்ளனர் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தம்மவரை இழந்த நிலையில் வெளிப்படுத்துகின்ற உணர்வுகளை ஒரு போராட்டமென்று நீதியமைச்சர் கூறியிருப்பதே ஒரு பெருந்தவறென்றே குறிப்பிடமுடியும். ஏனெனில், கடந்த காலங்களில் நீதி, நியாயம் வேண்டி ஜனநாயக ரீதியில் எழுப்பப்பட்ட குரல்கள் நசுக்கப்பட்டதாலேயே போராட்டங்கள் நாடளவில் வெடித்திருந்தன.

எனவே, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் உணர்வுகளையும், அவர்களின் அவலங்களையும் நீதியமைச்சர் அலி சப்ரி போராட்டங்கள் என்று வரையறை செய்வாரேயானால் சட்டம் - ஒழுங்கு என்பவற்றிலும் இலங்கையின் நீதித்துறையிலும் அந்த உறவுகள் நம்பிக்கை இழக்கும் சூழ்நிலைகளே வலுவடையும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விமோசனம் வழங்கும் வகையில் இருபது வருடங்களுக்கு முன்னரேயே ஆனணக்குழு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதுதவிர சில வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றபோது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பிரச்னைகளை கையாள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதுவரை காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் பாதிக்கப்பட்டோர் திருப்தியடையும் விதத்தில் எவ்வித தீர்வுகளையும் எட்டாத நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை போராட்டங்களால் பயனில்லை என்று நீதியமைச்சர் குறிப்பிட்டிருப்பது ‘வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது’ போலவே அமைந்துள்ளது.

இதேவேளை, வடக்கில் சுற்றுப்பயணம் செய்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் 2002ஆம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையோடு ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்களின்போது அன்றைய அரசாங்கம் சார்பாக தமிழீழ விடுதலைப் புலிகளோடு தாய்லாந்திலிருந்து நோர்வே ஊடாக சுவிற்சர்லாந்து வரை இடம்பெற்ற பேச்சுகளில் ஈடுபட்டவர். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அந்த இயக்கத்தின் அரசியல் துறை பொறுப்பாளர் சு. ப. தமிழ்செல்வன் ஆகியோரோடு பேச்சுக்களை நடத்திய அனுபவங்களை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கொண்டுள்ளார்.

எனவே, அரசாங்கத்தில் முக்கிய வகிபாகத்தை கொண்டுள்ள இந்த இரு அமைச்சர்களினதும் வடபகுதி விஜயம் அந்த மாகாண மக்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கின்றது.

இருந்தபோதிலும் இந்த விஜயத்தின் பயன்பாடுகள் எவ்வளவு தூரம் பலதரப்பட்ட வகையிலும் பாதிக்கப்பட்டு நீதி, நியாயங்களுக்காக ஏங்கி நிற்கும் வடபகுதி மக்களுக்கு அனுகூலமாக அமையும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 31 திங்கட்கிழமை
பிலவ வருடம் - தை 18
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : திதித்துவயம்




**மேடம்**
தரகு, கமிஷன் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். முதலீடுகளில் லாபம் கிடைக்கும். உங்களின் செல்வாக்கு கூடும். இன்று பேச்சிலும் செயலிலும் கவனமாக இருங்கள்.

**இடபம்**
யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். யோகம் கூடும். குடும்பத்தினரை மகிழ்விப்பதற்கான செலவுகள் அதிகரிக்கும். பணிக்காக வெளியூருக்கு செல்லும் நிலை உண்டாகும்.

**மிதுனம்**
சுப விஷயங்களில் தேவையான உதவிகள் கிடைக்கும். பணவரவு சம்பந்தமான முயற்சி ஒன்று வெற்றியடையும். கடன் பிரச்னை பெருமளவு தீரவதற்கான வாய்ப்பு உண்டு..

**கடகம்**
இன்று பெரிய அளவில் முதலீடுகள் செய்வதை தவிர்க்கவும். உணவினால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படாதபடி கவனம் தேவை. பணி தொடர்பான விஷயங்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

**சிம்மம்**
தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திருமணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படும். அதிர்ஷ்டம் அதிகரிக்கும். கட்டிடப் பணிகள் தொடரும்.

**கன்னி**
அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்பினால் நல்லது. பணியாளர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. கல்வி சம்பந்தமான முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்**
அலுவலகத்தில் உங்களுக்கான மதிப்பு உயரும். நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த உதவி ஒன்று கிடைக்கும். கடன் பிரச்னைகள் முடிவுக்கு வரும். கவலை ஒன்று தீரும்.

**விருட்சிகம்**
புதிதாக வீடு வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் உண்டு. உங்களது உழைப்பினால் நிதி வளர்ச்சி சீராக இருக்கும். உங்களது முயற்சியால் குடும்பத் தேவைகள் நிறைவேறும்.

**தனுசு**
உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவுகளையும் எடுக்க வேண்டாம். பொது இடங்களில் மற்றவரிடம் கவனமாகப் பேச வேண்டும். உங்களது வேலையை மட்டும் கவனிப்பது நல்லது.

**மகரம்**
பிறருக்கு உதவும் பொருட்டு அடுத்தவர் கடமையை ஏற்காதீர்கள். கூடுதல் நன்மைகள் நடைபெறும் நாள். மகிழ்ச்சி கூடும். அடுத்தவர் விஷயங்களில் தலையிட வேண்டாம்

**கும்பம்**
தந்தைக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும். குழந்தைகளுக்கு நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் இருக்கும். சுயதொழில் துவங்குவதில் அவசர முடிவு எடுக்க வேண்டாம்.

**மீனம்**
திட்டமிட்டதை விட இன்று அதிகப்படியான செலவுகள் இருக்கும். தாயாருக்கு மகிழ்ச்சியான நாள். வாகன யோகம் உண்டு. நண்பர்களுக்கு உதவுவீர்கள். பேச்சினால் நன்மை வரும்.

# அமைச்சர், எம்எல்ஏ குடும்பத்தினருக்கு உள்ளூராட்சி தேர்தலில் இடமில்லை

## ஸ்டாலினின் கட்டுப்பாட்டால் பலருக்கு வாய்ப்பு

மதுரை, ஜன.31

திமுகவில் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் உட்பட முக்கிய நிர்வாகிகளின் குடும்பத்தினர் உள்ளூாட்சித் தேர்தலில் போட்டியிடக் கூடாது என முதல்வர் கட்டுப்பாடு விதித்துள்ளார். இதனால் புதிதாக பலருக்கு வாய்ப்பு கிடைக்கும் எனக் கட்சியினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் பெப் 19 இல் நடை பெற உள்ளது. 2 நாட்களாக வேட்புமனு பெறப்படுகிறது. பெப் 4 வேட்பு மனுத் தாக்கல் செய்ய கடைசி நாள். இதனால் கூட்டணி பேச்சு, வேட்பாளர்கள் தேர்வில் கட்சியினர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

பல ஊர்களில் மேயர், துணை மேயர், நகராட்சி, பேரூராட்சித் தலைவர், மண்டல தலைவர்கள் உட்பட முக்கிய பதவிகளைப் பிடிக்க கட்சி நிர்வாகிகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் தி.மு.கவில் முக்கிய நிர்வாகிகளின் குடும்ப உறுப்பினர்கள் யாரும் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று முதல்வர் பிறப்பித்த உத்தரவு பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாகக் கட்சியினர் தெரிவித்தனர்.

தி.மு.க. மாவட்டச் செயலாளர்களுடன் தேர்தல் பணிகள் குறித்து முதல்வர் காணொலி வாயிலாக ஆலோசனை செய்தார்.



அப்போது அமைச்சர்கள், எம்எல்ஏ.க்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளின் குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிவதை தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் வாக்காளர்களிடம் தவறான எண்ணத்தை உருவாக்கிவிடும் என முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார்.

# தி.மு.கவுடன் பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெறுகிறது

## விசிக தலைவர் திருமாவளவன் தகவல்

சென்னை, ஜன. 31

நகர்ப்புற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக தி.மு.கவுடன் பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்து வருவதாக விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

நகர்ப்புற உள்ளூட்சி தேர்தலில் வார்ட் பங்கீடு தொடர்பாக தி.மு.கவுடன் காங்கிரஸ், தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக,முதல்வரும், திமுக தலைவருமான ஸ்டாலினை விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் அண்ணா அறிவாலயத்தில்



சந்தித்து பேசினார்.

சுமார் 30 நிமிடங்கள் நடந்த இந்த சந்திப்பில், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான இட ஒதுக்கீடு குறித்து ஆலோசிக்கப் பட்டது. பின்னர், செய்தியாளர்களிடம் திருமாவளவன் கூறியதாவது:

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக அந்தந்த மாவட்டஅளவில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்களுடன் கூட்டணி கட்சியினர் கடந்த 3 நாட்களாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இந்த பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்து வருகிறது.

இதற்கிடையே, 'விசிகவுக்கு போதிய இடங்களை ஒதுக்க வேண்டும். மாநகராட்சி மேயர், துணை மேயர் பதவி, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணை தலைவர் பதவிகளையும் வழங்க வேண்டும்' என்று முதல்வர் ஸ்டாலின் உடனான சந்திப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆட்சிப் பணி விதிகளின் திருத்தத்தால் அரசு நிர்வாகம் நிலைகுலைந்துவிடும்

## வைகோ காட்டம்

சென்னை, ஜன. 31

இந்திய ஆட்சிப்பணி விதிகளில் மேற்கொள்ளப்படும் திருத்தம் அரசுப் பணி நிர்வாகத்தை நிலைகுலையச் செய்துவிடும் என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ காட்டமாக கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து வைகோ வெளியிட்ட அறிக்கையில், "இந்திய ஆட்சிப்பணி விதிகள், 1954-இல், விதி எண் 6-இல் திருத்தங்கள் மேற்கொள்ள பாஜக அரசு குறிப்பு ஆணை வெளியிட்டு, அவற்றை மாநில அரசுகளுக்கு அனுப்பி கருத்துகளை கேட்டு இருக்கிறது.

மத்திய அரசு நினைத்தால் மாநிலங்களில் பணிபுரியும் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை மத்திய அரசின் பணிக்கு அழைத்துக் கொள்ளலாம். மாநில அரசின் ஒப்புதலுடன்தான் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை மத்திய அரசிற்கு பணி இடமாற்றம் செய்ய முடியும் என்று நடைமுறையில் உள்ள விதியைத்தான் பாஜக அரசு திருத்தம் செய்ய முனைந்து இருக்கிறது.

மாநில அரசுகளுடன் கலந்தாய்வுச் செய்யத் தேவை இல்லை அலுவலர்களை விடுவிக்க மாநில அரசின் தடை இல்லா சான்று அவசியம் இல்லை. மத்திய அரசு வரையறுத்துள்ள காலக்கெடுவிற்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியை மாநில அரசு விடுவிக்காவிடினும், அவர் குறிப்பிட்ட திகதியில் இருந்து மத்திய அரசு அதிகாரியாகவே கருதப்படுவார். மத்திய அரசின் பணியிட மாற்றத்தில் மாநில அரசுக்கு கருத்து வேறுபாடு எழுந்தால், இறுதியில் ஒன்றிய அரசின் முடிவை ஏற்பதைத் தவிர மாநில அரசுக்கு வேறு வழி இல்லை.



தற்போது விதிகளில் திருத்தம் கொண்டு வந்து மாநில அரசுகளைக் கிள்ளுக் கீரையாக கருதி, இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை விருப்பம்போல பந்தாடலாம் என்று முடிவெடுத்து இருப்பது அரசுப்பணி நிர்வாகத்தையே நிலைகுலையச் செய்துவிடும். எனவே, மத்திய பா.ஜ.க. அரசு இந்திய ஆட்சிப் பணி விதிகளில் திருத்தம் மேற்கொள்ளும் முயற்சியை கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன்" என்று வைகோ கூறியுள்ளார்.



# பேராறு நீர்த்தேக்கத்தை பாதுகாக்க நிகழ்ச்சி திட்டம்!

வவுனியா, ஜன. 31

வவுனியாவில் நீரேந்து பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு இன்றைய தினம் வவுனியா பேராறு நீர்த்தேக்க பகுதியில் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் சிந்தனை ஊடாக 2025ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் நோக்கிலேயே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் நிறைவேற்றப்படுகின்ற வட மாகாணத்தில் நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவே குறித்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் நீரேந்து பகுதியைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், பேராறு நீர்த்தேக்கத்தின் நீரேந்து பகுதிகளில் 250 மரக்கன்றுகள் நடப்பட்டன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், அமைச்சின் இணைப்புச்செயலாளர் சங்கரலிங்கம், மற்றும் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# பூஸ்டர் தடுப்பூசியை இதுவரை 10 இலட்சம் பேர் பெறவில்லை!

## சுகாதாரப் பிரிவு தகவல்

கொழும்பு, ஜன. 31

**நாட்டில் சுமார் 10 இலட்சம் பேர் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவில்லை என சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.**

கடந்த வாரம் நாட்டில் அடையாளம் காணப்பட்ட கோவிட் - 19 தொற்றாளர்கள் மற்றும் கோவிட் தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 சதவீதத்தாலும், கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 6 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயலூக்கி தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையி லானோரே, மருத்துவ சிக்கல்கள் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர் சுகாதார அமைச்சின் கோவிட் 19 சம்பந்தமான பிரதான இணைப்பாளர், சுகாதார சேவைகள் தொழில்நுட்பட பிரிவின் பணிப்பாளருமாக மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கோவிட் தொற்றால் மரணித்தவர்களில் நான்கில் 3 பேர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காரணத்தால் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

# மசகு எண்ணெயின் விலை சர்வதேச சந்தையில் உயர்வு

கொழும்பு, ஜன. 31

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரிப்பு!

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் அரசியல் பதற்றநிலை காரணமாக விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடை காரணமாக ப்ரண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90 அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், அமெரிக்காவின் டபிள்யூ. டி. ஐ ரக எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86. 82 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

மேலும், கடந்த 6 வாரங்களாக மசகு எண்ணெயின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 76,536 சுற்றுலா பயணிகள் ஜனவரி மாதத்தில் வந்தனர்!

கொழும்பு, ஜன. 31

ஜனவரி மாதத்தில் நாட்டுக்கு 76 ஆயிரத்து சுற்றுலா பயணிகள் கடந்த 29 ஆம் திகதி வரை வந்துள்ளனர்.

இதில் 12 ஆயிரத்து 368 பேர் ரஷ்யாவிலிருந்து நாட்டை வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தவிர, இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர் என்று சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 1,682 சுற்றுலாப் பயணிகள் மட்டுமே இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (ஐ)



# கொக்குவில் இந்து கல்லூரியில் 3 மாடிக் கட்டம் திறக்கப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜன. 31

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூன்று மாடி கட்டிடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஒன்றிணைந்து திறந்து வைத்தனர்.

வடக்கு மாகாண சபையின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் நிதியுதவியில் இந்த கட்டட தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், நீதியமைச்சின் செயலாளர் மாயதுன்னை, வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரிசி விலையை உயர்த்தும் சதியை முறியடித்து விட்டேன்!

## அமைச்சர் பந்துல பெருமிதம்

கொழும்பு, ஜன. 31

புத்தாண்டின் போது அரிசியின் விலை 300 ரூபாயாக அதிகரிப்பதற்காக சதி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும், எமது ஆலோசனையின் அடிப்படையில் மொத்த விற்பனை நிலையங்களில் இந்த சதித்திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன சனிக்கிழமை புறக்கோட்டை பகுதியிலுள்ள மொத்த அரிசி விற்பனை நிலையங்களில் அவற்றின் விலை தொடர்பில் கண்காணிப்பதற்காக மேற்கொண்ட திடீர் விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புத்தாண்டின் போது அரிசியின் விலை 300 ரூபாயாக அதிகரிப்பதற்காக சதி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் கண்காணிப்பதற்காகவே இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தேன்.

தற்போது இந்த சந்தையில் ஒரு கிலோ நாட்டரிசி 105 ரூபாய்க்கும், சம்பா 118 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இது சில்லறை விலையாகும் போது, வேறு மாகாணங்களுக்குச் செல்லும் போது போக்குவரத்து மற்றும் பொதியிடப்படும் பை என்பவற்றின் விலைகளும் சேர்த்து அறவிடப்படும். இவை அனைத்தையும் சேர்த்து விற்பனை செய்யப்படக் கூடிய நியாயமான விலையில் சதொச வில் அரிசி விற்பனை செய்யப்படுகிறது.

சதொசவில் ஒரு கிலோ நாட்டரிசி 105 ரூபாயாகவும், சம்பா 128 ரூபாயாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சதொச விலையை விட குறைந்த விலைக்கு புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்களில் வர்த்தகர்களுக்கு பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் - என்றார். (ஐ)

# மன்னாரில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பம்!

மன்னார், ஜன. 31

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருட இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடைகள் தற்போது ஆரம்பித்துள்ளன.

நாட்டில் இரசாயன உரம் தடை செய்யப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட நெல் செய்கையின் அறுவடை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நெல் அறுவடையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக 30-40 மூடை நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களில் 15-20 மூட்டைகளே கிடைப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் களை நாசினிகள் தடை செய்யப்பட்ட நிலையில் நெற்செய்கையில் பெறும் பகுதியில் புற்கள் மற்றும் முள்புதர்கள் நிறைந்து காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



மேலும், தனியார் நெற்செய்கை கொள்வனவுக்கு இது வரை நிர்ணய விலை நிர்ணயிக்கப்படாமையால் நாளுக்கு நாள் நெல்லின் விலை குறைவடைவதாகவும் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர். (ஐ)

ஈழநாடு




தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகத்தை தனது தனிப்பட்ட அலுவலகமாக உரிமைகோரும்விதமாக கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி அறிவிப்பு பலகைஒன்றைதலைமைகட்டடத்தில்பொருத்தியுள்ளார்.

# குழந்தைகளை தாக்குகிறது ‘மிஸ்ஸி’ என்ற தீவிர நோய்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 31**

**நாட்டில் குழந்தைகளை பாதிக்கக்கூடிய மற்றொரு தீவிர நோய் குறித்து கொழும்பு ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**

“மிஸ்ஸி” என்ற நோய் ஏற்பட்டால் குழந்தைகள் இறக்க கூட நேரிடும் என கொழும்பு ரிட்ஜ்வே வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இந்த நோய் மிகவும் தீவிர மாக இருக்கலாம் எனவும் இதனால் அனைத்து புலன்களும் செயலிழந்துவிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதன் மூலம் இந்த நோயின் அபாயத்தைக் குறைக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஹிஷாலினி மரணம்:

# ரிஷாத் உள்ளிட்ட ஐவர் மீது அடுத்தவாரம் குற்றப்பத்திரம்!

கொழும்பு, ஜன. 31

ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரின் மனைவி உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக அடுத்த வாரம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு அடுத்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகக் கொழும்பு தெற்கு சிறுவர் மற்றும் மகளிர் விவகார பிரிவின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணியாற்றிய நிலையில் தீக்காயங்களுக்கு உள்ளான சிறுமி ஹிஷாலினி கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த ஜூலை மாதம் 15ஆம் திகதி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவி, அவரின் தந்தை, சகோதரர் மற்றும் குறித்த சிறுமியை பணிக்கு அமர்த்திய தரகர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

அதுவரையில் வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மீதும் இந்த விடயத்தில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், வீட்டில் சிறுமி ஹிஷாலினி தங்கியிருந்த அறையில் சில எழுத்துகள் அடையாளம் காணப்பட்டன.

இதனையடுத்து சிறுமி ஹிஷாலினியின் சடலம் இரண்டாவது பிரேதப் பரிசோதனைக்காகக் கடந்த ஜூலை மாதம் 30 ஆம் திகதி மீளத் தோண்டி எடுக்கப்பட்டது.

இரண்டாவது பிரேதப் பரிசோதனை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தநிலையில் குறித்த வழக்கு அடுத்த வாரம் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதோடு அன்றைய தினம் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# தங்கத்தின் விலை உலக சந்தையில் சரிவு

கொழும்பு, ஜன. 31

உலக சந்தையில் தற்போது தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் 22 கரட் தங்கத்தின் விலை 114,300 ரூபாயாகவும், 24 கரட் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபாயாகவும் காணப்படுகின்றது.

உலக சந்தையில் தற்போது தங்கத்தின் விலை சற்று குறைந்திருந்தாலும், எதிர்வரும் காலங்களில் தங்கத்தின் விலை மீண்டும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலைக்கு உள்வாங்கும் மாணவர் தொகை உயரும்!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

பரீட்சை கால அளவை மாற்றுவதோடு பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி பொதுதராதர சாதாரண தரப்பரீட்சையை நிறைவு செய்து மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு செல்லும் காலம் மற்றும் உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்து பல்கலைக் கழகம் செல்வதற்கான காலம் என்பவற்றை குறைப்பது தொடர்பில் கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ‘கறுப்பு ஜனவரி’ போராட்டம் இன்று யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 31

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் நகரில் இன்று திங்கட்கிழமை ‘கறுப்பு ஜனவரி’ கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கில் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்படவுள்ளது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் பங்கேற்புடன் “கறுப்பு ஜனவரி“ போராட்டம் இடம் பெறவுள்ளது. (ஐ)

# கோண்டாவிலில் வன்முறையில் ஈடுபட்ட நபருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜன. 31

கோண்டாவிலில் ஒருவர் தாக்கிப் படுகாயப்படுத்திய துடன், வீடு ஒன்றையும் தாக்கி சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதானவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை குறித்த சம்பவத்தை பொலிஸார் சமாதானமாக முடிக்க முற்பட்ட நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவல் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் பொறுப்பதிகாரி நேரடியாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து , சந்தேக நபரை கைது செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடந்த குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உரும்பிராய் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் கோண்டாவிலில் உள்ள வீடொன்றினுள் புகுந்து வீட்டின்மீது தாக்குதலை மேற்கொண்டு, வீட்டில் இருந்தவர் மீதும் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளார். இந்தத் தாக்குதலில் தலையில் காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வைத்திய சாலை பொலிஸார் , சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் தாக்குதலாளியையும், தாக்குதலுக்கு இலக்கானவரையும் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு , முறைப்பாட்டைப் பதிவு செய்யாது நாட்களை கடத்தி வந்தனரென குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவல் கிடைக்கப்பெற்றதையடுத்து சம்பவம் தொடர்பில் நேரடியா விசாரணைகளை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்து நீதிவான் முன்னிலையில் நேற்று முன் தினம் தினம் முற்படுத்தியிருந்தார். (ஐ)



# கிளிநொச்சியில் பல்கலை. மாணவர்கள் இரத்ததானம்!

கிளிநொச்சி, ஜன. 31

கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த இரத்ததான முகாம் கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் குமார் பார்த்தீபன் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்ற குறித்த இரத்ததான முகாமில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எந்தக் கட்சியுடனும் இணைவதற்கு தயார்!

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

**நாட்டைப் பற்றி சிந்தித்து தேசிய கொள்கையை அமைப்பதற்கும், தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் எந்தவொரு கட்சியுடனும் இணைவதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.**

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்படுவது சிறப்பானதாகும் என்பதே எனது நிலைப்பாடாகும். நாட்டிலுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டுமெனில் ஐக்கிய மக்கள் சக்தியும் , ஐக்கிய தேசிய கட்சியும் மாத்திரமின்றி ஏனைய அனைத்து கட்சிகளும் ஒரே மேடையில் ஒன்றிணைய வேண்டும்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலக நாடுகளில் உணவு பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் நாடுகள் பட்டியலில் 12 ஆவது இடத்திலுள்ள இலங்கை, எதிர்வரும் ஓரிரு மாதங்களுக்குள் 10 ஆவது இடத்தைப் பிடிக்கக்கூடும். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் நாட்டில் மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும் - என்றார். (ஐ)



# மகாத்மாவின் சிரார்த்த தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

மகாத்மா காந்தியின் 74ஆவது சிரார்த்த தினம், யாழ். போதனா வைத்தியசாலை முன்றலிலுள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் இந்தியத் துணை தூதரகம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ வெளியீடான காந்தீயம் பத்திரிகையும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

காந்தீயம் பத்திரிகை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரனால் இப்பத்திரிகை வெளியிடப்பட்டது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கஜதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)



# பருத்தித்துறை பேதுருமுனையில் பொலிஸார் நேற்று சிரமதானம்!

வடமராட்சி, ஜன. 31

பருத்தித்துறை - பேதுருமுனை பிரதேசத்தை பருத்தித்துறை பொலிஸார் சிரமதானம் மூலம் துப்புரவு செய்ததடன் மரக்கன்றுகளையும் நாட்டி வைத்தினர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தப் பணி காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஒழுங்குபடுத்தலில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையில் இடம்பெற்றது.

இந்த சிரமதானப் பணியில் உதவிபொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்தமால்கொட பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிழக்வில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொலிஸார் பங்கேற்றனர். (ஐ - 02)

# 359 புறாக்களுடன் இரண்டு பேர் கைது

தப்போவை சரணாலயத்தில் விடுவிக்க கொண்டுவரப்பட்டன என்று சந்தேகிக்கப்படும் 359 புறாக்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கருவலகஸ்வெவை தப்போவை சரணாலயத்தில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் அக்குரணை, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டு எதிர்வரும் முதலாம் திகதி புத்தளம் நீதிவான் நீதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வடக்கு ஆளுநரின் செயலராக திருமதி இளமதி பதவியேற்றார்!

மானிப்பாய், ஜன. 31

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி இளமதி சபாலிங்கம் வெள்ளிக்கிழமை முதல் ஆளுநரின் கொழும்பு அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மும்மொழிப் புலமைவாய்ந்த திருமதி இளமதி சபாலிங்கம் அரச நிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு, தபால் சேவைகள் அமைச்சு மற்றும் அமைச்சுக்களில் மேலதிக செயலாளராகவும், செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

இவர் வடக்கு ஆளுநரின் செயலாளராக கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பணியாற்றுவார்.

இதேவேளை வட மாகாண ஆளுநரின் யாழ். அலுவலகத்திற்கு உதவிச்செயலாளர் ஒருவரும் வடக்கு மாகாண பிரதம செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்றம் அறிய வருகின்றது. (ஐ- 5)

# மதுபான போத்தல்களுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஜன. 31

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மதுபான போத்தல்களை விற்பனை செய்வதற்காக கொண்டு சென்ற சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் போலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சோதனை மேற்கொள்ளப்பட்டதில் குறித்த மதுபான போத்தல்களுடன் சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (ஐ)


# தனியாரிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய அரசு திட்டம்!

## அமைச்சர் காமினி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய மின்சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான யோசனை இன்று திங்கட்கிழமை அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் இருந்து நேரடியாக எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் சுட்க்காட்டினார்.



இதேவேளை, சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி எரிபொருள் சுத்திகரிப்பு கொதிகலனின் செயற்பாடுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. மசகு எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக சுத்திகரிப்பு ஆலையின் செயல்பாடு கடந்த ஜனவரி 3 ஆம் திகதி நிறுத்தப்பட்டது.

எனினும், இதுவரை 90,000 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி சபுகஸ் கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மசகு எண்ணெய் கிடைக்கப்பெற்றதன் பின்னர், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி முதல் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பிரத்தியேகக் கல்வியின் ஆதிக்கமும் பெற்றோர், பிள்ளைகளின் உளவியல் ரீதியான தாக்கமும்

**சந்துரு மரியதாஸ்**

பிரத்தியேகக் கல்வியின் ஆதிக்கமும் பெற்றோர், பிள்ளைகளின் உளவியல் ரீதியான தாக்கமும்: தன் பிள்ளைக்கு உகந்த துறை எது என்பதனை அறிந்துகொள்ளாமல், தன்னால் நிறைவேற்றிக் கொள்ளாத இலக்கினை தன் பிள்ளைகளைக் கொண்டு சாதிக்க முயற்சிப்போரின் கருவியே பிரத்தியேக வகுப்புக்கள் என்பதில் ஐயமில்லை. இவற்றின் உயிரோட்டத்தின் சுவடுகளை வசதி கொண்ட பெற்றோர்கள் தான் வலுப்படுத்துகின்றனர் என்று எண்ணினால் மறுபக்கம் இன்று வறிய பெற்றோர்களும் என்ன செய்வதென்று அறியாமல் தமது உழைப்பையெல்லாம் தனியார் வகுப்புக்களுக்குத் தாரைவார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

தனியாள் ஒவ்வொருவரையும் குவியப்படுத்தி கற்பித்தலில் சுவையும் விறுவிறுப்பும், கற்பவரைத் தூண்டும் விசையும், அன்பு வெளிப்பாடும், ஆசை வார்த்தைகளும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் பெரும்பாலும் கொண்டிருப்பதனால், மாணவர்களுக்காக பாடசாலையில் நடாத்தப்படும் இலவசக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இன்று அலட்சிப் போக்கினை அடைந்து வருகின்றன.

பல்கலைக்கழக அனுமதியில் போட்டி நிலவுகின்ற சூழலில் பிரத்தியேக போதனைகளை மாணவர் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக வந்துவிட்டதாயினும், அது ஆசிரியர்களது சுய கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது. மாதாந்த சம்பளப் பணத்தை விடுத்து, தினசரி சந்தாப்பணம் பெறும் இன்றைய பிரத்தியேக கல்வி வழங்கும் ஆசிரியர்களது நிலை சமூகக் கண்ணோட்டத்தில் அவர்களது அந்தஸ்தை குறைத்து விட்டதெனலாம். இன்றைய பிரத்தியேகக் கல்விக்கு செலவிடப்படும் செலவீனங்களால் பெற்றோர்கள் பதறிப் போய் காணப்படுகின்றனர். வறுமை கொண்ட குடும்பங்களில் உள்ள மாணவர்களின் நிலை என்னாவது? தமது சக மாணவர்கள் மேலதிக வகுப்புக்கள் மற்றும் பிரத்தியேகமான கல்வி பெறும்போது தாம் மட்டும் குடும்ப பொருளாதாரக் கஷ்டம் காரணமாக வெறும் மன உளச்சல்களுக்கே தள்ளப்படுகின்றனர்.

அத்தோடு இவ்வாறான பிரத்தியேக வகுப்புக்களின் ஆதிக்கத்தினால் பிள்ளைகள் பெற்றோரை வீட்டில் சந்திப்பதற்கான நேரங்கள் கூட மட்டுப்படுத்தப்பட்டு சென்று கொண்டிருக்கின்றது. பாடசாலை நேரம் தவிர்ந்து படுக்கைக்குச் செல்லும் நேரம் மட்டும் இன்று பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை பொதுவான கண்ணோட்டத்தில் “பிள்ளை கற்பதற்குத் தானே வெளியே செல்கிறான் இதில் என்ன தவறு இருக்கின்றது” என எண்ணத் தோன்றலாம் ஆனால் அவற்றுள் பல உண்மைகள் புதைந்து காணப்படுகின்றன.

மாணவர்களின் சமய வழிபாடுகளுக்கான நேரம் தடைப்படுகின்றமை, பிள்ளை பெற்றோருடன் கொள்ளும் மகிழ்ச்சிகளுக்குத் தடை போடப்படுகின்றது, குறிப்பாக ஒழுக்க சீர்கேடுகளுக்கு வழிசமைத்துக் கொடுக்கப் படுகின்மை, மாணவர்களின் வீணான மனவழுத்தங்கள், பெற்றோர்களின் அலைக்கழிப்பு, அதனால் உண்டாகும் மனவுளைச்சல்கள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

அனேகமான மாணவர்கள் எதிர்பால் கவர்ச்சிக்காக பிரத்தியேகக் கல்வியை நாடுவதனால் முறைசார் கல்விக்கே உரித்தான ஒழுக்கவியல் மீறப்படுகின்றது. பெற்றோர்கள் தமது சுய கௌரவத் திற்காக பிள்ளைகளை நிர்ப்பந்தம் செய்து பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்புகின்றனர். மாணவர்கள் தமது பாடத் திட்டத்தினை முன்கூட்டியே பிரத்தியேக வகுப்புக்களில் நிறைவேற்று வதால் பாடசாலையில் அதிக விடுமுறை களை சுயமாகவே எடுப்பதற்கு தூண்டப் படுகின்றனர்.

ஆனாலும் மாணவர்கள் எதற்காக பிரத்தியேக வகுப்புக்களின் தாக்கத்திற்கு உட்படு கின்றனர் என்பதனை அறிந்து, அவற்றினை பாடசாலைகள் மூலம் இயலுமான வரை சீர்ப்படுத்த வேண்டும். கல்வி முறையின் பல்வேறு இலக்குகளை பாடசாலை எனும் நிறுவனத்தினூடாக நிறைவேற்ற வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு முறைசார் கல்வியின் குறிக்கோளாகும். பிரத்தியேக வகுப்புக்களின் ஆதிக்கம் இன்று முறைசார் கல்வியின் தரத்தினைக் குறைத்துள்ளது என்பதில் ஐயமில்லை என்பதுடன் மாணவர்கள் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத நிலையும் காணப்படுகின்றது.

கால மாற்றங்களுக்கேற்ப கல்வி மாற்றங்கள் ஏற்படும் போது அவற்றினை நிறைவு செய்யும் நோக்கில் பாடசாலைச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை இன்றைய ஆசிரியர்களே ஏற்க வேண்டியவர்களாவர். மாணவர்களை மையமாகக் கொண்டே ஒரு நாடு ஊட்டம் பெறுகின்றது. இதற்காகவே ஒவ்வொரு பாடசாலையும் உயிர்ப்பான குறிக்கோள்களுடன் உருவாக்கப் பட்டிருகின்றது. ஆனால் இன்று



முறைசார் கல்வியின் நிலை உயிரோட்டம் இல்லாத கல்வி முறையாகி யுள்ளமை கவலைக் குரிய விடயமாகும்.

இன்றைய நவீன காலகட்டத்தினை நோக்கும் போது சமூகத்தில் இடம் பெறும் ஒவ்வொரு செயற்பாடுகளும் பொருளாதார அடிப்படையில் இடம் பெறுகின்றது எனலாம். ஆரம்பகாலத்தில் சேவை அடிப்படையில் வழங்கிவந்த கல்வி முறைகள் இன்று வருமானத்தினை மையமாகக் கொண்டு நகர்த்தப்படுகின்றது. கல்வி இலவசமாக்கப் பட்டமையால் இன்று அனேக மாணவர்களுக்கு அது அலட்சியமாக்கப் பட்டிருக்கின்றது. இதற்கு பெற்றோர்களின் கௌரவம், பிரத்தியேக வகுப்புக்களின் வண்ணமயமான விளம்பரங்களும், கவர்ச்சிகளும், பல்கலைக்கழக அனுமதியில் போட்டி நிலவுகின்ற சூழ்நிலையும் பிரத்தியேக போதனைகளை மாணவர் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக வந்துவிட்டதும், திறமை அடிப்படையில் வேலை வாய்ப்புக்களும், மாணவர்களின் நவநாகரீகப் போக்கும், எதிர்பாற் கவர்ச்சிகளும் பின்னணிகளாகவிருந்து பிரத்தியேக வகுப்புக்களுக்கு ஊக்கிகளாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதனால் இன்று கைக்கெட்டும் தூர இடைவெளியில் பிரத்தியேக வகுப்புக்கள் கேள்விபார் இல்லாமல் உருவாக்கப்பட்டுக் கொண்டே செல்கின்றது. இதனால் இன்றைய பாடசாலைகள் அரச பரீட்சைகளுக்கும், இணைப் பாடவிதான செயற்பாடு களுக்கும் மட்டுமே முறைசார் கல்வி வழங்கும் நிறுவனங்களான மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பாடசாலைகளில் இலவசக் கல்வியை வழங் கும் சில ஆசிரியர்கள் கூட பிரத்தியேக வகுப்புகளில் கற்பிக்கின்றனர். மீத்திறன் குறைவான மாணவர்களுக்கும், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் தான் மேலதிகமாக கல்வி வழங்கப்பட வேண்டும். ஆனால் இன்று பணத்தேவை ஒன்றினை மையமாகக் கொண்டு கல்வி விற்கப்படும் நிலையே காணப்படுகின்றது அதுமட்டுமல்லாமல் மீத்திறன் குறைவான மாணவர்கள் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லாத நிலையும் காணப்படுகின்றது. எனவே பிரத்தியேகக் கல்வி அவசியம் தான் ஆனால் அவை தேவைப்படும் உரிய மாணவர்களுக்கு மட்டும் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். இது ஒருபுறம் இருக்க மறுபுறம் மாணவர்கள் பிரத்தியேக கல்வி நிலையங்களில் கற்றதன் பிற்பாடு மீண்டும் பாடசாலையில் அதே விடயம் கற்பிக்கப்படும் போது பாடசாலைக் கல்வியை அலட்சியப்படுத்தும் சூழ்நிலை காணப்படுகின்றது. இதேவேளை பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களின் இவ்வாறான செயற்பாடுகளினால் அசமந்த நிலைக்கு உட்படுகின்றனர்.

நாட்டில் இன்று பத்தாயிரத்துக்கும் அதிகமான அரசாங்கப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. முறைசார் கல்வியின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டும் இத்தகு பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இன்று எதற்காக என்று வினா எழுப்பும் வகையிலாகி விட்டது. பிரத்தியேக வகுப்புக்களின் ஆதிக்கம் இன்று இலவசக் கல்வியின் தரத்தினைக் குறைத்துள்ளது என்பதில் ஐயமில்லை என்பதுடன், மாணவர்கள் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத நிலையும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள், ஆசிரியர்களுக்கிடையான முரண்பாடுகளுக்கு இவை வித்திடுகின்றன. அத்துடன் பெற்றோர்களின் கௌரவம் சார் செயற்பாடுகளின் தாற்பரியமும் பிரத்தியேக வகுப்புக்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதாகவே அமைந்துள்ளன.

எனவே இதற்கான ஆலோசனைகளை நோக்கும் போது குறிப்பாக அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முறைசார் கல்வியை வழங்கும் ஆசிரியர்களே பிரத்தியேகமாகக் கல்வி வழங்கும் போதுதான் எம்மை குறைவாக சிந்திக்க வைக்கின்றது. ஆசிரியர்கள் அல்லாத ஏனைய நபர்கள் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவதற்கு தடை விதிப்பதனை விட அரச பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைகளிலும் கற்பித்துவிட்டு பிரத்தியேக வகுப்புக்களிலும் இவ்வாறாக பிரத்தியேகமாக கல்வி வழங்குவதில் இருந்து தடைவிதிக்க வேண்டும். இதனைக் குறிப்பிட்ட வலயக் கல்வி பணியகம் மூலமாக மேற்பார்வை செய்வதும் சிறப்பானது. இவ்வாறு மேற்கொள்ளும் போது முறைசார் கல்வியில் அதிக அக்கறை காட்டுவது வலுப்படும்.

இரண்டாவது ஆசிரியர் பற்றாக்குறைகள் நிவர்தியாக்கப்படுவதோடு, குறிப்பான பாடங்களுக்கான ஆசிரியர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக மாணவர்கள் பாடசாலையில் ஆசிரியர் வளம் குறைவான பாடங்களுக்காகவும், கடினமான பாடங்களுக்காகவும் தான் பிரத்தியேக கல்வியை நாடுவர். எனவே இவ்வாறான முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைகள் உரிய முறையில் தீர்க்கப்படும்போது மாணவர்கள் பிரத்தியேகக் கல்வியை நாடுவது குறைக்கப்படும். இதன் மூலம் முறைசார் கல்வியை மட்டுமே கற்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாக்கப்படும். இதனைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்களின் அலட்சியப் போக்கினைக் குறைத்து அனைத்து மாணவர் களுக்குமான சமவாய்ப்பு நிறைந்த கல்வியை வழங்கமுடியும்.

கல்வியில் சமவாய்ப்பு என்பது பிரத்தியேகக் கல்விக்கு எதிரானது. ஏனெனில் பிரத்தியேகக் கல்வி குறிப்பிட்ட மாணவர்களுக்கானது. எனவே இவை மூலம் முறைசார் கல்வியை வலுப்படுத்தலாம். நான்காவது பிரத்தியேக வகுப்புக்களின் ஆடம்பரமான செயற்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் வேண்டும். ஏனைய பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள் என்பதற்காகவும் தனது நிர்ப்பந்தத்தின் பேரிலும் பிள்ளைகளைப் பெற்றோர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்புவதால் மாணவர்கள் மனவுளைச்சலுக்கு உள்ளாகும் நிலை தொடர்பாக பெற்றோருக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் வேண்டும். அடுத்த வீட்டுப் பிள்ளை இரு வகுப்புக்களுக்கு சென்றால் என்னுடைய பிள்ளை மூன்று வகுப்புக்களுக்காவது செல்ல வேண்டும் என்கின்றதான மனநிலையை பெற்றோர்களிடம் இருந்து நீக்குவதன் மூலம் ஆடம்பரமான, செலவுமிக்க பிரத்தியேகக் கல்வியிலிருந்து மீண்டு வினைத்திறன் மிக்க முறைசார் கல்விக்கு வழிகோல முடியும். ■

# பெகாசஸ் மென்பொருள் இந்தியா வாங்கியதா? மோடிக்கு எதிராக மீண்டும் எழுந்துள்ள சர்ச்சை

**பாலஸ்தீனிய விவகாரத்தால் பல தசாப்தங்களாக இந்தியா - இஸ்ரேலிய உறவு உறைபனி போல் இருந்தது. ஆனால் மோடியின் இஸ்ரேலிய வருகைக்கு பின் இருநாட்டு உறவுகள் சுமுகமாக மாறின.**

பெகாசஸ் உளவு மென்பொருளை இஸ்ரேல் நிறுவனத்திடம் இருந்து இந்திய அரசு வாங்கியது என்று அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட செய்திக் கட்டுரையை அடுத்து, இந்தியாவில் மீண்டும் பெகாசஸ் மென்பொருள் சர்ச்சை வெடித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் மத்திய அரசுக்கு தங்களின் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் பாதுகாப்புத் துறையின் ஒரு பிரிவான என்எஸ்ஓ (NSO) நிறுவனத்தின் தயாரிப்புதான் பெகாசஸ் உளவு மென்பொருள். இந்நிறுவனம் இந்த மென்பொருளை பல்வேறு நாடுகளின் அரசு அமைப்புகளுக்கு (உளவு, இராணுவம்) விற்பனை செய்து வருகிறது. நாட்டுக்கு எதிராக சதி திட்டங்கள் தீட்டுபவர்களை கண்டறிய இந்த மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது.

இந்த பெகாசஸ் மென்பொருள் மூலம் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோரின் கைத்தொலைபேசி தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் குற்றம்சாட்டின. இந்தியாவிலும் பத்திரிகையாளர்கள், மத்திய அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், நீதிபதிகள், அரசியலமைப்புப் பதவியில் இருப்போர், தொழிலதிபர்கள் என 300-க்கும் மேற்பட்டோர் கைத்தொலைபேசிகளில் இந்த மென்பொருள் மூலம் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் செய்த அமளியில் கடந்த ஆண்டு பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் முடங்க, உச்ச நீதிமன்றத்தால் 3 பேர் கொண்ட தனி விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. இந்த விவகாரம் இப்போது மீண்டும் இந்தியாவில் பூதாகரமாகியுள்ளது. அதற்கு காரணம், அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்டுள்ள புதிய செய்திக் கட்டுரை.


“உலகின் அதி சக்திவாய்ந்த சைபர் ஆயுதத்துக்கான போர்“ (The Battle for the World's Most Powerful Cyberweapon) என்ற பெயரில் வெளியிட்டுள்ள அந்த கட்டுரையில், “இஸ்ரேல் உடனான இரண்டு பில்லியன் பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுத ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, இந்திய அரசு கடந்த 2017இல் பெகாசஸ் மென்பொருளை வாங்கியது” என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், பல்வேறு தகவல்கள் அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. அதில், “இஸ்ரேல் பாதுகாப்புத் துறையின் ஒரு பிரிவான என்எஸ்ஓ (NSO) நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள புலனாய்வு அமைப்புகளுக்கு சந்தா அடிப்படையில் தனது கண்காணிப்பு மென்பொருளை ஒரு தசாப்த காலமாக விற்பனை செய்து வருகிறது.

பாலஸ்தீனிய விவகாரத்தால் பல தசாப்தங்களாக இந்தியா - இஸ்ரேலிய உறவு உறைபனி போல் இருந்தது. ஆனால் மோடியின் இஸ்ரேலிய வருகைக்கு பின் இருநாட்டு உறவுகள் சுமுகமாக மாறின.

2017இல் இந்திய பிரதமர் மோடியின் இஸ்ரேலிய பயணத்தின்போது, அவரும், முன்னாள் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் அந்நாட்டு கடற்கரையில் வெறும் கால்களில் நடந்தனர்.

இந்த உணர்வுகளுக்குக் காரணம் இருக்கிறது. அப்போது இருநாடுகளும் போட்டுக்கொண்ட ஒப்பந்தத்தில் பெகாசஸ் உளவு மென்பொருள் மற்றும் ஏவுகணை மையப்புள்ளியாக இருந்தன. அண்ணளவாக 2 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள அதிநவீன ஆயுதங்கள் மற்றும் உளவுத்துறை சாதனங்களின் தொகுப்பை விற்பனை செய்வதற்கு அந்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன. சில மாதங்களுக்குப் பிறகு, பெஞ்சமின்



நெதன்யாகு இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டார். இதன்பின், ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலில் பாலஸ்தீனிய மனித உரிமைகள் அமைப்பு பார்வையாளராக இணைவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது” என்று அந்தக் கட்டுரை விவரிக்கிறது.

இஸ்ரேலை சேர்ந்த என்எஸ்ஓ நிறுவனத்தின் பெகாசஸ் மென் பொருள் மூலம் உலகம் முழுவதும் மனித உரிமை ஆர்வலர்கள், செய்தியாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள் உட்பட 50,000 பேரின் தகவல்கள் திருடப்பட்டிருப்பதாக கடந்த ஆண்டு ஜூலையில் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தியாவில் 40 செய்தியாளர் கள் உட்பட 300 பேரின் கைத்தொலைபேசி தகவல்கள் திருடப் பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இந்த விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தின. பாராளுமன்றத்தின் இரு அவைகளையும் முடக்கின. பெகாசஸ் விவகாரம் தொடர்பான வழக்கு தற்போது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த பின்னணியில் அமெரிக்காவைச் சேர்ந்த நியூயார்க் டைம்ஸ் நாளிதழ், பெகாசஸ் மென்பொருள் தொடர்பாக கடந்த 28ஆம் திகதி விரிவான செய்தியை வெளியிட்டு சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

அதில், அமெரிக்கா, மெக்ஸிகோ, போலந்து, ஹங்கேரி, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் இஸ்ரேலிடம் இருந்து பெகாசஸ் மென்பொருளை வாங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டில் இஸ்ரேலிடம் இருந்து இந்திய அரசு பெகாசஸ் உளவு மென்பொருளை வாங்கியதாகவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் பயணத்தின்போது இஸ்ரேலிடம் இருந்து ரூ.15,000 கோடி மதிப்பில் பெகாசஸ் உளவு மென்பொருள், ஏவுகணைகள் வாங்கப்பட்டன. சில மாதங்களுக்குப் பிறகு நெதன்யாகு இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார்.

இதைத் தொடர்ந்து கடந்த 2019-ம் ஆண்டு ஜூன் மாதம் ஐ.நா. சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது” என்று நியூயோர்க்ரைம்ஸ்நாளிதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த செய்தியால் இந்தியாவில் மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது. இஸ்ரேலில் இருந்து பெகாசஸ் மென்பொருளை மத்திய அரசு வாங்கியதா, இதற்கு பிரதமர் நரேந்திர மோடி பதில் அளிக்க வேண்டும் என்று பெரும்பாலான எதிர்க்கட்சி தலைவர்கள் வலியுறுத் தியுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை மத்திய பட்ஜெட் கூட்டத்தொடருக்காக பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில், நியூயார்க் ரைம்ஸின் இந்தக் கட்டுரையால் மீண்டும் பெகாசஸ் சர்ச்சை பூதாகரமாகியுள்ளது. எதிர்க்கட்சிகள் இந்த விவகாரத்தில் மத்திய அரசு மீது கடும் விமர்சனங்களை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, “நமது ஜனநாயகத்தின் முதன்மை நிறுவனங்கள், மாநிலத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களை உளவு பார்ப்பதற்காக மோடி அரசாங்கம் பெகாசஸை வாங்கியுள்ளது வெட்டவெளிச்சமாகியுள்ளது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, இராணுவம், நீதித்துறை என அனைவரின் தொலைபேசியும் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளது. இது தேசத் துரோகம். மோடி அரசு தேசத் துரோகத்தை செய்துள்ளது” என்று கடுமையாக சாடியுள்ளார்.

ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, “இந்தியாவின் எதிரிகளைப் போல மோடி அரசு செயல்பட்டு, இந்திய குடிமக்களுக்கு எதிராக போர் ஆயுதத்தைப் பயன்படுத்தியது ஏன்? இது தேசத் துரோகத் திற்குச் சமம். யாரும் சட்டத் திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல, நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வோம்” என்று தெரிவித்துள்ளார். சிவசேனா எம்.பி. பிரியங்கா சதுர்வேதி தனது கண்ட னத்தில், “அந்த மென்பொருள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக பயன்படுத் தப்படவில்லை, மாறாக எதிர்க்கட்சி தலைவர்கள் மற்றும் பத்திரிகையாளர் களை குறிவைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. நாட்டையே பிக்பாஸ் நிகழ்ச்சியாக மாற்றியிருக்கிறார்கள். இப்படி செய்வது பாஜகவால் மட்டுமே சாத்தி யம். இந்திய வரி செலுத்துவோர் பணத்தை இந்தியர்களை கண்காணிக்க பயன்படுத்தி யிருக்கிறார்கள்” என்று சாடியுள்ளார்.

மத்திய அமைச்சரும் முன்னாள் இராணுவ தளபதியுமான வி.கே.சிங் ரூவிட்டரில் வெளியிட்ட பதிவில், “நியூயோர்க் ரைம்ஸை நம்ப முடியுமா? அந்த ஊடக நிறுவனத்துக்கு, பணம் கொடுத்தால் எபபடி வேண்டுமானாலும் செய்தி வெளியிடும்” என்று குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய அரசு வட்டாரங்கள் கூறும் போது, “பெகாசஸ் விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.வி.ரவீந்திரன் தலைமையிலான குழு விசாரணை நடத்தி வருகிறது. அந்த குழுவின் அறிக்கைக்காக காத்திருக்கிறோம்” என்று தெரிவித்தன. **- தி இந்து**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

- பின்வரும் தொடர்பைக் கொண்டு 14ஆம், 15ஆம் வினாக்களுக்கு விடை தருக.

△ x □ x ○ = 40

△ x△ = 25

△ x ○ = 10

15. △ இன் பெறுமானம் யாது?
   1) 4 2) 5 3) 2

16. □ இன் பெறுமானம் யாது?
   1) 4 2) 5 3) 10

17. 6 ⊡ 8 ✱ 4 = 10 இக் கணித செய்கையில் ⊡ , ✱ ஆகிய குறியீடுகளுக்குப் பொருத்தமான கணிதக் குறியீடுகள் முறையே
   1) -, + 2) +, - 3) x , ÷

18. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றம் இல்லாது தெரியும் எழுத்து எது?
   1) Q 2) Z 3) W


19. இன்று 2ம் திகதி ஞாயிறு எனின் அடுத்து வரும் 16ம் திகதி என்ன கிழமை?
   1) திங்கள் 2) சனி 3) ஞாயிறு

20. எனது மகன் பாலன். பாலனின் பாட்டன் தேவன். எனின், எனக்குத் தேவன் என்ன முறை?
   1) தந்தை 2) மகன் 3) பேரன்

21. மழை பெய்தால் நிலம் நனையும் மழை பெய்துள்ளது எனவே ………………… பொருத்தமான முடிக்கும் சொல்லினைத் தெரிவு செய்க.
   1) நிலம் நனைந்துள்ளது 2) நிலம் நனையும் 3) நிலம் நனைகிறது

22. சிறிய விலங்கில் இருந்து பெரிய விலங்கு வரை ஒழுங்கு முறையில் இருக்கும் தொடரைத் தெரிவு செய்க.
   1) எறும்பு, அணில், பல்லி, முயல் நாய்
   2) நாய், முயல், அணில், பல்லி, எறும்பு
   3) எறும்பு, பல்லி, அணில், முயல், நாய்

23. உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது.




இதற்கேற்ப சிறிய வட்டமொன்று 5kg எனின் செவ்வகமொன்றின் நிறை யாது?
   1) 5kg 2) 6kg 3) 10kg

24. ஒரு கூடையில் உள்ள மாபிள்கள் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிக்கும். 50ஆவது நிமிடத்தில் கூடையில் உள்ள மாபிள்கள் 40 எனின், 53ஆவது நிமிடத்தில் கூடையில் உள்ள மாபிள்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1) 80 2) 160 3) 320

25. இடம் இருந்து வலமாக நான்கு மாணவர்கள் எண் அட்டைகளுடன் நின்றார்கள். முதலாவது நபர் 7 உம், மூன்றாவது நபர் 1 உம் இரண்டாவது நபர் மூன்றாவது நபரிலும் 5 அதிகமான எண்ணும் நான்காவது நபர் பூச்சியமும் வைத்து இருந்தனர். எனின், இவர்கள் வைத்திருந்த எண் என்ன?
   1) 7530 2) 7150 3) 7610

26.




இங்கு இலக்கம் 3 ற்கு எதிரே உள்ள இலக்கம் எது?
   1) 1 2) 4 3) 2

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 15. 2 | 18. 3 | 21. 1 | 24. 3 |
| 16. 1 | 19. 3 | 22. 3 | 25. 3 |
| 17. 2 | 20. 1 | 23. 2 | 26. 1 |

கல்வி tv CHANNEL-1

**31.01.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**31.01.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# காந்தியின் சிரார்த்த தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஜன. 31

மகாத்மா காந்தியின் 74 ஆவது சிரார்த்த தினம் மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள காந்தியடிகளின் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க. சத்தியசீலன், காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் க. பாரதிதாசன், மாநகர சபை உறுப்பினர் சிவம் பாக்கியநாதன், வர்த்தக சங்க பிரிதிநிதிகள் உட்பட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.எல்.முஹம்மது மீராஸாஹிப் ஆகியோர் பங்கேற்று காந்தியின் சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஹரி சிறுவர் இல்ல மாணவர்களுக்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ. எல். முஹம்மது மீராஸா ஹிப் ஏற்பாட்டில் கற்றல் உப கரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ)



# திருமலை மீனவர் குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன

திருகோணமலை, ஜன. 31

திருகோணமலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீனவர் குடும்பங்கள் மற்றும் கடலுக்குச் சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்கப் பட்டன.

திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் தயானந்த ஜெயவீர தலைமையில் வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழு ஆரம்பிக்கப் பட்டு 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி திருகோணமலை மாவட்டத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் மீனவ குடும்பங்கள் மற்றும் கடலுக்குச் சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் உலர் உணவு பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பி. தனேஷ வரன் இலங்கை மீன்பிடி திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.சஞ்சீவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்குபற்றினர்.

திருகோணமலை மாவட்டத்தில் மூவின மக்களையும் ஒன்று திரட்டி பாரபட்சமின்றி செயற்படும் அரசசார்பற்ற நிறுவனமாக ஓய்வு பெற்ற அதிகாரிகளினால் உருவாக்கப்பட்ட பிரஜைகள் குழு பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# கிழக்கில் தொற்று உச்சம் விரைவாக தடுபூசி பெறுக!

## மாகாண பணிப்பாளர் மக்களுக்கு அறிவுறுத்தல்

**திருகோணமலை, ஜன. 31**

**கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் கடந்த சில நாள்களாக படிப் படியாக அதிகரித்து வருவதால் அனைவரையும் விரைந்து தடுப்பூசி ஏற்றுமாறு வலியுத் தப்பட்டுள்ளது.**



இது தொடர்பாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ. ஆர். எம். தௌபீக் ஞாயிற்றுக் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“2021 டிசெம்பர் மாதம் 1622 நோயாளர்களும் 17 மரணங்களும் பதிவு செய்யப்பட்டன. இந்த நிலையில், 2022 ஜனவரி மாதம் 2,500 புதிய தொற்றாளர்களும் 25 மரணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

“உலக நாடுகள் உட்பட இலங்கையிலும் கோவிட்19 இன் புதிய வகை பிறழ்வான ஒமைக்ரோன் இதற்குக் காரணமாக இருக்கலாம். இக்கிருமியானது நோயாளிக்கு வெகுவாக பாதிப்பை ஏற்படுத்தாது எனக் கூறப்பட்ட போதிலும் மிக விரைவாக ஏனையோருக்குத் தொற்றக் கூடியது.

“எனவே, இவ்வகை தொற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள ஏற்கெனவே நாம் கூறுகின்ற பொதுவான கட்டுப் பாடுகளான சமூக இடை வெளிகளை பேணல், சரியான முறையில் முகக் கவசம் அணிதல், அடிக்கடி கைகளை சவர்க்காரம் இட்டு கழுவுதல் அத்தோடு, தேவையற்ற ஒன்றுகூடல்களைத் தவிர்த்தல், மரண வீடுகள், சடங்குகள், சமய சடங்குகள், திருமண வைபவங்களின் போது முகக் கவசங்களை அணிந்து செயற்படுவது அவசியமாகும்.

“மேலும், மூன்றாவது தடுப்பூசியான பைசர் தடுப்பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் ஏற்றிக்கொள்வதுடன், 12 - 19 வயதுக்கு இடைப் பட்டவர்கள் பைசர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதும் சிறந்ததாகும்.

“தடுப்பூசியில் ஏற்கெனவே இருந்த ஆர்வம் மக்கள் மத்தியில் குறைவடைந்து, ஆதாரமற்ற பொய் வதந்திகளை மக்கள் மத்தியில் பரப்பியமை தடுப்பூசியை பெறுவதில் சிக்கல் நிலைமை காணப்படுகிறது. “எதிர்வரும் காலங்களில் கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து மரண எண்ணிக்கையும் அதிகரிக்கும் போது, தடுப்பூசியை பெறாதவர்கள் கைசேதப்பட வேண்டி ஏற்படும்” - என்றார். (ஐ)

# கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்போது பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

கல்முனை, ஜன. 31

கட்டுப்பாடுகள் விதிக்கப் படுகின்றபோது பொதுமக்கள் தவறாமல் ஒத்துழைக்க வேண்டும். எமது மக்கள் ஒத்துழைக்கின்றபோது மீண்டும் எமது பிராந்தியம் கொரோனா தடுப்பு, ஒழிப்பு நடவடிக்கைகளில் வெற்றிக்கொடி நாட்ட முடியும் என கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸ் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தேசிய கோவிட் - 19 தடுப்பூசி ஏற்றும் பணியின் ஒரு வருட பூர்த்தி நாள் நிகழ்வு சனிக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

விஞ்ஞான ரீதியாக துறை சார்ந்த நிபுணர்கள் சொல்வதை நம்பி செயல்பட்டு கொரோனா தடுப்பு - தவிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேசிய மட்டத்தில் மட்டும் அல்ல, சர்வதேச மட்டத்திலும் மிக சிறந்த இயங்கு திறன் நிறைந்த நிர்வாக கட்டமைப்பை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கொண்டு அற்புதமாக இயங்கி வருகின்றது.

கொரோனா என்றால் மக்கள் அலறி அடித்த காலம் இப்போது மாறி விட்டது. அதன் பேராபத்தை மக்கள் மறந்து விட்டனர். அதை தடுக்கவும் தவிர்க்கவும் செய்ய வேண்டிய அடிப்படை விடயங்கள் சிலவற்றைக்கூட செய்ய தவறுகின்றனர்.

கொரோனா தடுப்பு தவிர்ப்பு நடவடிக்கைகளில் எமது நாடு உலக அளவில் முன்னிலையில் நிற்கின்றது. கொரோனா தடுப்பூசி நடவடிக்கைகளில் சர்வதேச அளவில் சாதனை படைத்து நிற்கின்றது. அதையே நாம் நினைவு கூருகின்றோம். அதற்காக ஆபத்து எம்மை விட்டு நீங்கி விட்டது என்று அர்த்தம் கிடையாது.

ஒமைக்ரோன் திரிபு மிக வீரியமாக தொற்றிய வண்ணம் உள்ளது. சுகாதார துறையினர் இதை வெல்வதற்கு இன்னமும் வீரியமாக போராட வேண்டியுள்ளது. ஆனால், மக்கள் இயல்பு நிலைக்கு மீண்டும் திரும்பியது போல் நடந்து கொள்வது கவலை தருகின்றது. கிழக்கு மாகாணத்தின் நிலை உண்மையிலேயே மிக கவலைக்கு இடமானதாக இருக்கின்றது. மிக கணிசமான எண்ணிக்கையில் தொற்றாளர்கள் கிழக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட வண்ணமுள்ளனர். எனவே, கட்டுப்பாடுகள் விதிக்கப் படும்போது பொதுமக்கள் அவற்றைத் தவறாது பின்பற்ற வேண்டும் - என்றார். (ஐ)

# கஜமுத்துக்களுடன் இருவர் கைதாகினர்!

மட்டக்களப்பு, ஜன. 31

மட்டக்களப்பு, புல்லுமலையில் 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு கஜமுத்துகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ். சுரேஷ்குமார் தெரிவித்தார்.

மகோயாவிலிருந்து புல்லுமலை விஹாரைக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் குறித்த கஜமுத்துகளை கடத்திக் கொண்டு மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருந்த வேளை, வவுணதீவு விசேட அதிரடிப் படையினரும் கல்லடி கடற்படை வீரர்களும் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 30.8 கிராம் மற்றும் 4.5 கிராம் எடையுள்ள இரு கஜமுத்துகளும் கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது. (ஐ)

## 2017 இற்கு பின் மிகப்பெரும் ஏவுகணை சோதனையை செய்தது வடகொரியா!



பியொங்யாங், ஜன. 31

2017ஆம் ஆண்டுக்குப் பிறகு வடகொரியா தனது மிகப்பெரிய ஏவுகணையை விண்ணில் ஏவியுள்ளது.

வட கொரியாவின் கிழக்கு கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை உள்ளூர் நேரப்படி 07:52 மணிக்கு ஏவப்பட்டதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

நவம்பர் 2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறகு சோதிக் கப்பட்ட மிகப்பெரிய ஏவுகணை இது என்றும் தென் கொரி யாவின் தேசிய பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை 2,000 கிமீ உயரத்தை எட்டியதாகவும், 800 கிமீ தூரத்தை 30 நிமிடங்களில் கடந்து, ஜப்பான் கடலில் இறங்கியது என்றும் ஜப்பானிய மற்றும் தென் கொரிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த மாதம் வடகொரியா மொத்தம் ஏழாவது சோதனையை நடத்தியுள்ள நிலையில் ஜப்பான், தென் கொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அனைத்தும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

வட கொரியாவுக்கு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பரிசோதனை மற்றும் அணு ஆயுத சோதனைகளுக்கு தடை விதித்துள்ளதோடு கடுமையான தடைகளையும் ஐ.நா. விதித்துள்ளது.

ஆனால் தொடர்ந்து தடையை மீறும் வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன், தனது நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இதனை மேற்கொள்வதாக கூறியுள்ளார். (அ)

## சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரிப்பு!

லண்டன், ஜன. 31

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ளது.

கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் அரசியல் பதற்றநிலை காரணமாக விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடை காரணமாக ப்ரண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90 அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் டபிள்யூ.டி. ஐ ரக எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.82 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. மேலும் கடந்த 6 வாரங்களாக மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடாவில் தடுப்பூசி எதிர்ப்பாளர்கள் ஒட்டாவாவில் திரண்டு ஆர்ப்பாட்டம்!

## குடும்பத்தினருடன் பிரதமர் ட்ரூடோ பாதுகாப்பான இடத்துக்கு மாற்றம்!!

ஒட்டாவா, ஜன. 31

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவரது ஒட்டாவா வதிவிடத்தை விட்டுப் பாதுகாப்பான பகுதி ஒன்றுக்கு இடமாற்றப்பட்டிருக்கிறார். தடுப்பூசி கட்டாயமாக்கப்படுவதையும் வைரஸ் சுகாதார விதிகளையும் தொடர்ந்து எதிர்த்து வருவோர், நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் புறப்பட்டுபெரும் வாகனப் பேரணியாகத் தலைநகரத்தை வந்தடைந்துள்ளனர்.



கனடா - அமெரிக்கா எல்லையைக் கடக்கின்ற கனரக வாகனங்களது சாரதிகளுக்குத் தடுப்பூசியைக் கட்டாயமாக்கும் அறிவிப்பை பிரதமர் ட்ரூடோவின் அரசு கடந்த மாதம் விடுத்தி ருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சாரதிகள் ஆரம்பித்த ”சுதந்திர வாகனத் தொடரணி” என்ற போராட்டமே தற்போது நாடளாவிய எதிர்ப்புப் போராக மாறித் தலைநகர் வரை அணிவகுத்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா போன்ற நாட்டின் தொலைதூர மாகாணங்களில் இருந்தும் வாகனங்கள் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் தாண்டி வந்து தலைநகரப் பேரணியில் இணைந்துள்ளன.

கடும் பனிக் குளிர் காலநிலை எச்சரிக் கைக்கு மத்தியில் கால்நடையாக வந்த ஆயிரக்கணக்கானோர் ஒட்டாவாவில் பிரதமர் அலுவலகம் பாராளுமன்றம் என்பன அமைந்துள்ள இடங்களுக்கு அருகே திரண்டுள்ளனர். வாகனங்களின் நீண்ட அணிகள் பெரு வீதிகளை நிறைத்துள்ளன.

கடந்த சனிக்கிழமை மாலை வரை அசம்பாவிதங்கள் ஏதும் நிகழவில்லை. அமைதியான முறையில் மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.பின்னராக நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர்கள் ஓர் ஊடகச் சந்திப்பையும் மகஜர் கையளிப்பையும் நடத்தவுள்ளனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குள் நுழைந்து குழப்பம் விளைவிக்க முயலும் சக்திகள் தொடர்பில் பொலீஸார் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.பாதுகாப்புக் காரணங்களுக்காக பிரதமர் ட்ரூடோவும் அவரது குடும்பத்தினரும் எங்கே என்று குறிப்பிடப்படாத ரகசிய இடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்பதைப் பொலீஸார் உறுதிசெய்துள்ளனர்.வாகனப் பேரணியினரை பிரதமர் ட்ரூடோ மிகச் சிறிய சிறுபான்மையினர் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் ‘சுதந்திர வாகனப் பேரணி’ சுமார் 45 மைல்கள் தூரத்துக்கு நீண்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஒட்டாவா தேசிய போர் நினைவிடத்துக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த டசின் கணக்கான டிராக்டர் வாகனங்களைப் பொலிஸார் அங்கிருந்து அகற்றியுள்ளனர்.

சுகாதார கட்டுப்பாடுகளையும் பிரதமர் ரூடோவையும் கண்டிக்கும் வாசகங்களுடனான சுலோக அட்டைகள் வாகனங்களில்காணப்படுகின்றன.இடைவிடாது வாகன சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. ‘கோவிட் -19’ தொடர்புடைய கட்டுப்பாடுகள் இப்படியே தொடர்ந்தால்”கனடாவைக் கம்யூனிசம் கைப்பற்றும்” என்று சில சாரதிகள் கோஷமிட்டனர் என்று ”சிபிசி நியூஸ்” செய்தி வெளியிட்டுள்ளது.

தடுப்பூசிக்கு எதிராக அணிதிரட்டுகின்ற சாரதிகளது நிலைப்பாடு அறிவியலுக்கும் - அரசாங்கத்துக்கும் - சமூகத்துக்கும் எதிரானது என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறிவருகிறார். (அ)

## டோங்கா எரிமலை வெடிப்புக்குப் பின் எண்ணெய் கசிவு இரட்டிப்பாகியுள்ளது

பெருவியன் கடற்கரையில் எண்ணெய் கசிவு முன்னர் அறிவிக்கப்பட்டதை விட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனவரி 15 அன்று கிட்டத்தட்ட 12,000 பீப்பாய்கள் எண்ணெய் கடலில் கசிந்ததாக சுற்றுச்சூழல் அமைச்சர் ரூபன் ராமிரெஸ் கூறினார்.

இதனால் உள்ளூர் மீன்கள் மற்றும் கடல் பறவைகள் இறப்புக்கு காரணமாக அமைந்தது என்றும் கசிவு சுற்றுச்சூழல் பேரழிவு என்றும் அதிகாரிகள் விவரித்தனர்.

டோங்காவில் எரிமலை வெடிப்பினால் ஏற்பட்ட சுனாமி பேரலையால் லா பாம்பிலா சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள டேங்கர் சேதமடைந்ததாக கூறப்படுகின்றது.

லிமாவுக்கு வடக்கே சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள இந்த தளம், ஸ்பானிஷ் எண்ணெய் நிறுவனமான ரெப்சோலுக்குச் சொந்தமானது.



இந்நிலையில் இதற்கு இழப்பீடு கோரியுள்ள பெரு, இந்த சம்பவத்தில் ரெப்சோலின் பங்கு குறித்து வழக்கறிஞ்ஞர்கள் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

விசாரணை நடைபெற்று வரும் நிலையில், நான்கு நிர்வாகிகள் நாட்டை விட்டு வெளியேற 18 மாதங்களுக்கு தடை விதிக்க நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

கொங்கோவில் ஐ.நா நிபுணர்கள் கொலை;

## 51 போராளிகளுக்கு மரண தண்டனை!



கின்ஸாசா, ஜன. 31

கொங்கோ குடியரசில், இரண்டு ஐ.நா. நிபுணர்களின் கொலையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 51 போராளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்வீடிஷ்-சிலி ஜைடா காடலான் மற்றும் அமெரிக்கரான மைக்கல் ஷார்ப் ஆகியோர் 2017 இல் கசாய் பகுதியில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.

அரசாங்கப் படைகளுக்கும் ஒரு போராளிக் குழுவுக்கும் இடையே இடம்பெற்ற மோதலை அடுத்து , அவர்கள் மனித புதைகுழிகள் குறித்து விசாரணையை மேற்கொண்டிருந்தனர்.

அவர்களின் மொழிபெயர்ப்பாளரான பெது ஷிண்டெலாவும் கொல்லப்பட்ட நிலையில் கடத்தப்பட்டு 16 நாட்களுக்குப் பின்னர் அவர்களது உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

நான்கு வருட விசாரணையின் முடிவில் இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட 51 போராளிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. (அ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் ஆஷ்லே பார்ட்டி சம்பியன்

மெல்பர்ன், ஜன. 31

ரென்னிஸ் அரங்கில் உலகின் முதல் நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி சனிக்கிழமையன்று அமெரிக்காவின் டானியல் கொலின்ஸை 6-3 7- 6 (2) என்ற கணக்கில் தோற்கடித்து தனது முதல் அவுஸ்திரேலிய ஓப்பன் பட்டத்தை வென்றார்.

இந்த வெற்றியால் அவுஸ்திலேய கிராண்ட்ஸ்லம் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அவுஸ்திரேலியாவின் 44 ஆண்டுகால காத்திருப்பு முடிவுக்கு வந்தது.

இறுதியாக கிராண்ட்ஸ்லம் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 1978ஆம் ஆண்டு கிறிஸ் ஒ நீல் பட்டத்தை அவுஸ்திரேலியாவுக்காக பெற்றுக் கொடுத்திருந்தார்.

2019 பிரெஞ்சு ஓப்பன் மற்றும் 2021 விம்பிள்டனை வென்ற பார்ட்டியின் மூன்றாவது கிராண்ட்ஸ்லம் பட்டமும் இதுவாகும். இதன் மூலம் அவர் ஒவ்வொரு முதன்மை கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வென்றுள்ள பெருமையை பெற்றார். (ஐ)




## ஜாம்பவான்களின் இருபது - 20 வேர்ள்ட் ஜியான்ட்ஸ் சம்பியன்!

ஓமான், ஜன. 31

ஜாம்பவான்களின் லீக் கிரிக்கெட் தொடரை வேர்ள்ட் ஜியான்ட்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

மூன்று அணிகள் பங்கெடுத்த இந்த தொடரின் இறுதிப் போட்டி ஓமான் அல் அமிரட் மைதானத்தில் சனிக்கிழமை மாலை நடந்தது.

வேர்ள்ட் ஜியான்ட்ஸ் மற்றும் ஆசிய லயன்ஸ் அணிகள் இந்தப் போட்டியில் மோதின.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆசிய லயன்ஸ் அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை எதிரணிக்கு வழங்கினார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வேர்ள்ட் ஜியான்ட்ஸ் அணியின் கோரி அண்டர்சனின் ஆட்டமிழக்காமல் 94 ஓட்டங்களை எடுத்து உதவ, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 256 ஓட்டங்களை குவித்தது.

கோரி ஆண்டர்சன் 43 பந்துகளில் 8 சிக்ஸர்கள், 7 பௌண்ட்றிகள் அடங்கலாக 94 ஓட்டங்களை பெற்றார், அவருக்கு அடுத்தபடியாக அதிகபட்சமாக கெவின் பீற்றர்சன் 48 (22 பந்துகளில்) ஓட்டங்களையும், அணித் தலைவர் டேரன் சமி 38 (17) ஓட்டங்களையும் மற்றும் பிரொட் ஹடின் 37 (16) ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆசிய லயன்ஸ் சார்பில் பந்து வீசிய நுவான் குலசேகர 3 விக்கெட்களையும், சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

257 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆசிய லயன்ஸ் அணியால் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 231 ஓட்டங்களை மாத்திரம் பெற முடிந்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான திலகரத்ன டில்சான் 25 ஓட்டங்கள், சனத் ஜயசூரியா 3 8 ஓட்டங்களுடன் அதிரடியான ஆரம்பத்தை வழங்கினர்.

இவர்களின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய மூன்றாம் நிலை வீரரான உபுல் தரங்க 25 ஓட்டங்களையும், அஷ்கர் ஆப்கான் 24 ஓட்டங்களையும் அதிகபடியாக எடுத்தனர்.

இவர்களை தொடர்ந்து களமிறங்கிய வீரர்களால் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களை குவிக்க முடியவில்லை. சீரான இடைவெளியில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர்.

இதனிடையே ஆறுதல் தரும் வகையில், மொஹமட் யூசுப் மாத்திரம் 21 பந்துகளில் 39 ஓட்டங்களை பெற்றார்.

வேர்ள்ட் ஜியான்ட்ஸ் அணியின் பந்துவீச்சில், அல்பி மோர்கல் 3 விக்கெட்களையும், மொண்டி பனேசர் 2 விக்கெட்களையும், ரியான் சைட்போட்டம், மோர்ன் மோர்கல் மற்றும் கெவின் பீற்றர்சன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இறுதியில் 25 ஓட்டங்களால் வெற்றி பெற்றது உலக ஜாம்பவான்கள் அணி. போட்டியின் ஆட்டநாயகனாக கோரி அண்டர்ச னும், தொடரின் ஆட்டநாயனாக மோர்ன் மோர்கலும் தெரிவானார்கள். (ஐ)



ஆஸி. ஓப்பன் ரென்னிஸ்:

## இரட்டையர் பிரிவில் நிக், தனாசி சம்பியன்

மெல்பர்ன், ஜன. 31

நிக் கிர்கியோஸ் மற்றும் தனாசி கொக்கினாகிஸ் - சனிக்கிழமையன்று மெல்போர்னில் சக அவுஸ்திரேலிய வீரர்களான மாட் எப்டன் மற்றும் மேக்ஸ் பர்செல் ஆகியோரை 7-5, 6-4 என்ற கணக்கில் வீழ்த்தி அவுஸ்திரேலிய ஓப்பன் ஆண்கள் இரட்டையர் பட்டத்தை வென்றனர்.

கிராண்ட்ஸ்லமில் இந்த ஜோடிக்கு இது முதல் இரட்டையர் வெற்றியாகும்.

"ஸ்பெஷல் கேஸ்" என்று அழைக்கப்படும் கிர்கியோஸ் மற்றும் கொக்கினாகிஸ் ஆகியோர் மெல்பர்னின் ராட் லாவர் அரங்கில் உற்சாகமான கூட்டத்தின் முன்னிலையில் 7-5 6-4 என்ற கணக்கில் எதிரிகளை தோற்கடித்து பட்டத்தை தமதாக்கினர். 1980இற்குப் பிறகு மெல்போர்னில் நடந்த முதல் அவுஸ்திரேலிய ஆண்கள் இரட்டையர் இறுதிப் போட்டி இதுவாகும். (ஐ)




## ஆஸியின் உயரிய விருது மிற்செல் ஸ்ரார்க் வசம்!

சிட்னி, ஜன. 31

அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான அலன் போர்டர் மற்றும் பெலிண்டா கிளார்க் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 22 ஆண்டுகால வரலாற்றில் இந்த விருதுக்கு தேர்வாகியுள்ள 5ஆவது பந்துவீச்சாளராகி உள்ளார் ஸ்ரார்க். இதற்கு முன் பட் கம்மின்ஸ், மிற்செல் ஜோன்சன், பிரெட் லீ மற்றும் க்ளென் மக்ராத் ஆகிய பந்துவீச்சாளர்களே இந்த விருதை வென்றிருந்தார்கள்.

இதேபோல, பெண்கள் கிரிக்கெட்டில் முதன்முறையாக இந்த விருதை வென்றுள்ளார் ஆஷ்லே கார்ட்னர்.

கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகள் ஆகியோர் அளிக்கும் வாக்குகள் அடிப்படையில் இந்த விருதுக்கான வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மிட்செல் ஸ்ரார்க் கடந்த ஓராண்டு காலகட்டத்தில் மொத்தம் 43 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். அவர் சகலதுறை வீரர் மிற்செல் மார்ஷை விட ஒரு வாக்கு அதிகம் பெற்று இந்த விருதை தட்டிச் சென்றுள்ளார்.

இதை தவிர பிற விருதுகளை வென்றுள்ள வீரர்களின் விபரம் வருமாறு:-

இந்த ஆண்டுக்கான அவுஸ்திரேலியாவின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரராக டிராவிஸ் ஹெட், சிறந்த ஒருநாள் போட்டி வீரராக மிற்செல் ஸ்ரார்க், சிறந்த இருபது - 20 போட்டி வீரராக மிற்செல் மார்ஷ் ஆகியோர் தெரிவாகினர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் ஹோல் ஒவ் பேமிற்கு முன்னாள் வீரர்கள் ஜஸ்டின் லாங்கர் மற்றும் ரேலி தாம்ப்ஸன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் பெண்கள் கிரிக்கெட்டில் சிறந்த ஒருநாள் போட்டி வீராங்கனையாக அலிஸா ஹெலி, சிறந்த இருபது 20 போட்டி வீராங்கனையாக பெத் மூனி ஆகியோர் தேர்வாகியுள்ளனர்.

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஜொகோவிச்சுக்கு சிக்கல்!

பாரிஸ், ஜன. 31

கொரோனா தடுப்பூசிக்கான புதிய விதிமுறையால் பிரெஞ்சு ஓப்பனில் ஜொகோவிச் பங்கேற்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

சேர்பிய ரென்னிஸ் வீரர் நோவக் ஜொகோவிச். கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத இவரை, மெல்பர்னில் நடந்த ஆஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்க அனுமதிக்கவில்லை. இதனால் 'நடப்பு சம்பியன்' அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்ளும் வாய்ப்பை இழந்தார்.

இந்நிலையில், வரும் மே 22இல் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடக்கவுள்ள பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லம் தொடரில் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பிரான்ஸில், விதிக்கப்பட உள்ள புதிய கொரோனா தடுப்பூசி கட்டுப்பாடு காரணமாக இவர், இத்தொடரில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பிரான்ஸில், மைதானம், ஹோட்டல் உள்ளிட்ட பொது இடங்களுக்கு செல்பவர்கள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தி இருக்க வேண்டும். ஒருவேளை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள், கடைசி ஆறு மாதங்களுக்குள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவில்லை என்ற சான்றிதழை வைத்திருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு தற்போது உள்ளது.

ஆனால், வரும் பெப். 15 முதல், கொரோனா பாதிக்கப்படாத காலம் 4 மாதங்களாக குறைக்கப்படவுள்ளது. இதன்படி, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட ஜொகோவிச்சின் சான்றிதழ் காலாவதியாகிவிடும். எனவே, இத்தொடரில் பங்கேற்க இவர், தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் அல்லது மீண்டும் கொரோனா தொற்றால் பாதிக்கப்படவில்லை என்ற சான்றிதழை வைத்திருக்க வேண்டும். இதனால், அவர் பிரெஞ்சு தொடரில் பங்கேற்பதும் சிக்கலாகியுள்ளது.



# இந்தியாவிலிருந்து வந்த ரயில் என்ஜின்களில் கோளாறுகள்!

கொழும்பு, ஜன.31

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எம் 11 ரக ரயில் என்ஜின்கள் பெரும் தொழில்நுட்ப கோளாறுகளுடன் காணப்படுகின்றன என்று ரயில் சாரதிகளின் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட என்ஜின்களுள் 7 ரயில் என்ஜின்கள் போக்குவரத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, குறித்த ரயில் என்ஜின்களை இறக்குமதி செய்யும் போது, நியமிக்கப்பட்ட தொழிநுட்ப குழுவே அதற்கான முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் ரயில் சாரதிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (கே)

# வாயில் கதவு வீழ்ந்து 6 வயது சிறுமி மரணம்!

கொழும்பு, ஜன.31

அநுராதபுரம், தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், ஆறு வயது சிறுமியின் மீது வாயில் கதவு விழுந்ததில், சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார் என்று, தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில், தம்புத்தேகம முசல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த சிறுமியே மரணமடைந்தார்.

சிறுமி ஆசிரியை ஒருவரின் வீட்டுக்கு சென்றுவிட்டு வீடு திரும்புவதற்காக ஆசிரியையின் வீட்டிலிருந்த வாயில் கதவின் அருகில் வந்துள்ளார் என்றும் இதன்போது சிறுமியின் தாய் வாயிற் கதவை திறக்க முற்பட்டபோது வாயிற் கதவு சிறுமியின் மீது விழுந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமியை, தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதித்தப் போதிலும் சிறுமி சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். பிரேத பரிசோதனைக்காக தம்புத்தேகம வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# நீர்வீழ்ச்சியில் குளித்த நால்வர் மூழ்கி மரணம்!

கொழும்பு, ஜன.31

நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற நால்வர் நீரில் மூழ்கி மரணமடைந்தனர் என்று, பதுளை அட்டாம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

உமாஓயா கெரந்தி எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடிய மூன்று யுவதிகளும் இளைஞர் ஒருவருமே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்தனர்.

அட்டம்பிட்டி பிதேசத்தை சேர்ந்த ஜெயராம் காஞ்சன பிரியா (வயது 21), செல்வகுமார் ஹரிமலாதேவி (வயது 19), நாஹகெல லிந்துலை பிரதேசத்தை சேர்ந்த சடையப்பன் சந்திரலேகா (வயது 23) ஆகிய மூன்று யுவதிகளும் அட்டம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த டேவிட் குமார் (வயது 23) என்ற இளைஞருமே நீரில் மூழ்கி மரணமடைந்தனர்.

இது தொடர்பில், அட்டம்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, பொலநறுவை அரலங்கவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திவுல்தமன பிரதேசத்தில், மாதுறு ஓயாவில் தவறி விழுந்து நபரொருவர் நேற்று முன்தினம் மரணமடைந்தார் என்று, அரலங்கவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னம்பிட்டியை சேர்ந்த 36 வயது நபரே மரணமடைந்தார். குறித்த நபர், தனது நண்பர்கள் மூவருடன் மணல் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

மதிய உணவு உண்பதற்காக மாதுருஓயாவுக்கு சென்று கைகளை கழுவுவதற்கு முயற்சித்த போது தவறி விழுந்துள்ளார் என்று தெரியவருகிறது.

இது தொடர்பில் அரலங்கவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# துப்பாக்கி வெடித்ததில் எஸ்.ரி.எவ். அதிகாரி பலி!

கொழும்பு, ஜன.31

பதுளை - அப்புத்தளை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் காரியாலயத்தில் பணியாற்றிவந்த அதிகாரி ஒருவர் துப்பாக்கி வெடித்ததில் நேற்று முன்தினம் ஒருவர் உயிரிழந்தார்.

என். டி. சந்திரசேன என்ற 54 வயது அதிகாரியே இவ்வாறு உயிரிழந்தார்.

துப்பாக்கி வெடித்ததில் அவரின் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது கையிலிருந்த துப்பாக்கி எவ்வாறு இயக்கப்பட்டது என்பது தொடர்பில் இதுவரை தெரியவில்லை.

பிரேதப் பரிசோதனைக்காக தியத்தலாவை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், அப்புத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (கே)

# விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க சட்டமூலத்தை கொண்டுவாருங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

**கொழும்பு, ஜன.31**

**விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் சட்ட மூலத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும் என்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

விவசாயத்தின் எதிர்காலம் குறித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்கு, கொள்கை மற்றும் வேலைத்திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய ஐக்கிய கமத்தொழிலாளர் பிரகடனத்தை நாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வு, பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கற்பனை ரீதியாக உரத்தை தடைசெய்து இந்த நாட்டின் விளை நிலங்களை தரிசு நிலங்களாக மாற்றும் சதித்திட்டத்தை கையில் எடுத்த அரசாங்கம், தனது நண்பர்களுக்கும், தனது எடுபிடிகளுக்கும் கோடிக் கணக்கில் சம்பாதிக்க வாய்ப்பளித்துள்ளது.

பொலநறுவை உட்பட இராஜரட்டை பகுதிகளை மையமாகக் கொண்டே தானிய களஞ்சிய தளமாக இலங்கை உருவானது. அவ்வாறான வரலாற்று சிறப்புமிக்க பிரதேச விவசாய மக்களுக்கு, சீனா மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை வழங்கும் அளவுக்கு தேசப்பற்றுமிக்க அரசாங்கம் கீழ்த்தரமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு ஆகும் போது அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்த நம் நாட்டை தற்போது சீன அரிசிகளினால் நிரப்பும் நிலைக்கு இந்த அரசாங்கம் தள்ளியுள்ளது. "துர்ப்பாக்கிய நோக்கு" அமுலுக்கு வந்ததும் முழு நாட்டிலும் பஞ்சத்துக்கான அறிகுறிகளையே காண முடிகின்றது.

தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்காக உடனடியாக நட்டஈடு வழங்க வேண்டும். அதற்கான பிரேரணைகளை அரசாங்கம் உடனடியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு தேவையான அனைத்து ஒதுக்கீடுகளுக்கும் பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனையின்றி ஆதரவு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஏற்ற வகையில் உரிய நட்டஈட்டு தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். விளை நிலங்களை கிராமிய அபிவிருத்தியின் கேந்திர நிலையமாக மாற்றுவதோடு விவசாயிகளை பலப்படுத்தி அவர்களின்வாழ்க்கை தரத்தை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கே)

# திருத்தப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்கு!

சம்மாந்துறை, ஜன. 31

மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்த சம்மாந்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட புளியடி வீதி, கஞ்சர் வீதி, பண்டு வீதி ஆகிய வீதிகளை கிராமிய வீதி மற்றும் அத்தியவசிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு செய்து உத்தியோகபூர்வமாக மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் அஸ்பர் உதுமாலெப்பையின் பங்கெடுப்புடன் இடம்பெற்றது.

சுமார் 6 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் நடைபெற்ற இந்த அபிவிருத்திகளை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் கே. கோவிந்தசாமி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம நிலதாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

2.8 கிலோமீற்றர் நீளமுள்ள



வீதிகள் அபிவிருத்தி செய்யவும் இந்த திட்டத்தை சம்மாந்துறை பிரதேசத்தில் செயல்படுத்த முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கும் இந்த திட்டத்தை நிறைவேற்ற காரணமாக அமைந்த அமைச்சர்கள் உட்பட அதிகாரிகளுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்வதாக அவர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

**மணமகள் தேவை**

ஆண் 31 வயது. யாழ். இந்து வேளாளர். சுதுமலை. சைவபோசனம். உத்தரட்டாதி நட்சத்திரம் B.Sc(special) Computational Physics (Colombo) - ஆசிரியர் (physics & Computer Science) சைவபோசனமுடைய பெண் விரும்பத்தக்கது. ஆனால் கட்டாயமில்லை.

தொலைபேசி - 0762213233

# போதை பொருள் விற்ற தாயாரும் மகனும் கைது!

கொழும்பு, ஜன 31

போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட தாயையும் மகனையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைதுசெய்துள்ளனர் என்று கொழும்பு, பன்னிப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னிப்பிட்டி - கந்தஹேனையை சேர்ந்த 49 வயதுடைய தாயும் 23 வயதுடைய மகனுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் விற்பனையில் ஈடுபடுவதற்காக நபரொருவர் பன்னிப்பிட்டி, அம்பகஸ்ஹதர சந்திக்கு வந்துள்ளார் என்று, மஹரகம பொலிஸின் இலஞ்ச ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, பொலிஸ் குழுவொன்று விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தது.

இதன்போது ஹெரோயின் விற்பனைக்காக வந்திருந்த நபரை சோதனைக்கு உட்படுத்திய பொலிஸார் அவரிடமிருந்து 1 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினை கைப்பற்றினர். இதனையடுத்து குறித்த நபரின் வீட்டை சோதனைக்கு உட்படுத்திய பொலிஸார் 7 கிராம் ஹெரோயினை கைப்பற்றினர். அத்துடன், ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட நபரையும் அவருக்கு உடந்தையாக இருந்த அவரது தாயையும் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## 13ஐ இடைக்காலத்...

தனது இந்தக் கருத்துக்கு சான்றாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய 'தி வில் ரு ப்ரீடம்' (The Will to Freedom) ஆங்கில நூலை - (தமிழில் சுதந்திர வேட்கை என்ற பெயரில் வெளியானது) மேற்கோள் காட்டியுள்ளார்.

*13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையிலேயே அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.*

இதில், வழக்கறிஞர்கள் என்று சொல்வோர் இந்த நூலை வாசிக்க வேண்டும் - வாசித்திருப்பார்கள் - பொய் சொல்கிறார்கள். இவர்கள் விடுதலைப் புலிகளின் பெயரால் மக்களை ஏமாற்றுவது சரியல்ல. இந்த நூல் 2001ஆம் ஆண்டு வெளியாகியிருந்தது. இந்த விடயம் தவறு என்றால் உடனடியாகவே விடுதலைப் புலிகள் மறுத்து இருப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ச. வி. கிருபாகரன் ஆங்கில நூலின் கூறிய 256 - 258ஆம் பக்கங்களை மேற்கோள்காட்டிய விடயங்கள் சுதந்திர வேட்கை என்ற பெயரில் தமிழில் வெளியான நூலில், 341 - 345ஆம் பக்கங்களில் உள்ளன. வாசகர்களின் இலகுவுக்கு அந்தப் பக்கங்களில் குறிப்பிடப்பட்ட விடயத்தின் முக்கிய அம்சங்கள் அப்படியே இங்கு பிரசுரமாகின்றது.

'மாற்று வழிகளைப் புலிகள் தேடுவது என்பது, அரசியல் சுதந்திரத்தை உறுதிப்படுத்தி தனி அரசை நிறுவுவது என்ற அவர்களின் உறுதியான கொள்கைக்கு மாறானது ஆகாதா என, தனிப்பட்ட உரையாடல் ஒன்றின்போது பாலாவிடம் நான் கேட்டேன். அதற்கு, புலிகளின் அரசியல் வியூகத்திற்குள் எந்தக் குழப்பமும் இல்லை என்று பாலா பதிலளித்தார்.

மேலும், 'விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, இது, சிங்கள மக்களுடன் தமிழ் மக்களுக்கான சகவாழ்வின் சாத்தியக்கூறுகளைச் சோதிக்கும் ஒரு தீவிரமான பரிசோதனையாகும். இந்த மாற்று வழிகளைத் தேடுவதன் காரணமாகப் புலிகள் எதையும் இழந்துவிடப் போவதுமில்லை' என்றும் 'மாகாண சபைத் தேர்தலில் புலிகள் வெற்றி பெற்றால், அவர்கள் வரித்துக்கொண்ட அரசியல் இலட்சியமான - தமிழர் தாயகம் மற்றும் தமிழ்த் தேசம் ஆகிய கோட்பாடுகளை அசைக்க முடியாத யதார்த்தங்களாக அவர்கள் மாற்றியமைப்பார்கள்' எனவும் பாலா எனக்கு விளக்கினார்.

மேலும், 'நிரந்தர தீர்வு ஒன்றுக்கு, மாகாண சபை முறைமை ஒரு சரியான அடிப்படை அல்ல. நாங்கள் சிங்கள மக்களுடன் சமாதானத்தையும் இணக்கமான சக வாழ்வையும் விரும்புகின்றோம். அதனால், விடுதலைப் புலிகள் இயக்கமானது, மாகாண சபைத் தேர்தலை ஓர் இடைக்கால ஏற்பாடாக மாத்திரம் எதிர்கொள்வதற்குத் தீர்மானித்திருக்கின்றதே அல்லாமல், அதனை ஒரு நிரந்தர தீர்வாக அல்ல.

மாகாண சபைத் தேர்தல்களில் பங்கேற்று, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக நாங்கள் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் - தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடு என்ற முக்கியமான விடயத்தையும் உள்ளடக்கியதான நிரந்தர தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியும்' என்று திரு. ஹமீத் அவர்களுக்கு பாலா விளக்கினார் என்றும் அந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, 13ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா தனது தேவைக்காக உருவாக்கியது என்ற கருத்தும் தவறானது என்று கூறிய அவர், அவ்வாறு இந்தியா தனது நலன் கருதி உருவாக்கியிருந்தால் இன்றும் இலங்கை அரசாங்கம் அதன் கைப்பிள்ளையாக இருந்திருக்கும். சீனா வசம் சென்றிருக்காது என்றும் கூறினார். (ஐ)

## இன்னும்...

வலைத்தளங்கள் பக்கம் சென்றால், முகநூலில் அநுரகுமார திஸாநாயக்கதான் ஜனாதிபதி. மறுபுறத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பில் சஜித்தும் கதைக்கின்றார். கடந்த 5 ஆண்டுகளில் இவர்கள் தான் நாட்டை சீரழித்தனர். நாட்டு வளங்களை விற்பனை செய்தனர்.

சமூகவலைத்தளங்கள் ஊடாக அரசுக்கு எதிராக பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டாலும் இன்னும் 6, 7 மாதங்களில் நிலைமை தலைகீழாக மாறும். கடந்த ஆட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் சிறைக்கு செல்ல வேண்டிவரும். இந்த ஆட்சியின்கீழ் ஜனநாயகம் முழுமையாக பாதுகாக்கப்படுகின்றது. அதனால்தான் கள்வர்களெல்லாம் கத்துகின்றனர்-என்றார். (அ)

## கிடைக்காத...

தெரிந்து கொண்டும் அதனை பெற முயற்சிக்கிறோம் என்று இளைஞர்களை மக்களை தூண்டி விடுகிறார்கள். அது சாத்தியமல்லாத விடயம். எத்தனை இளைஞர் யுவதிகளை இவ்வாறான அரசியல் வாதிகளின் போராட்டத்தின் மூலம் இழந்து விட்டோம், எத்தனை இளைஞர் யுவதிகள் வடக்கில் தமது எதிர்காலத்தை இழந்துவிட்டார்கள், வடக்கில் உள்ள இளைஞர்களுக்கு நான் ஒன்றைக் கூறி வைக்க விரும்புகின்றேன். உங்களை பிழையாக வழிநடத்தும் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள். உங்களுக்கு நல்ல சிறப்பான எதிர்காலம் உள்ளது. உங்களுக்கு முன்னால் உலகம் உள்ளது. உலகத்தை நோக்கி உற்றுப்பாருங்கள். ஆனால் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள். அத்தோடு இந்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி கடிதம் அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்புவதன் மூலம் ஒரு நாடு கிடைத்துவிடுமா?

ஏற்கனவே 13 ஆம் திருத்தச் சட்டம் இங்கே நடைமுறையில் உள்ளது. அதனை நாங்கள் பேசி நடைமுறைப்படுத்துமாறு கோரினால் அது சாத்தியப்படும். அதை விடுத்து நாங்கள் கடிதம் அனுப்புவதன் மூலம் அது நடைபெறாது. அத்தோடு நானும் வெளிவிவகார அமைச்சரும் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் தமிழ் பேசும் அனைத்துக் கட்சியினரையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்ய உள்ளோம்.

சந்திப்புகள் மூலம் இங்கு உள்ள பிரச்னைகள் தொடர்பில் நாங்கள் பேசி அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நான் யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சென்றபோது அங்கே போதைப்பொருள் தொடர்பான வழக்குடன் சம்பந்தப்பட்டோரே பலர் கைதிகளாக உள்ளனர். வடக்கில் இந்த போதைப்பொருளை தடுத்து நிறுத்துவதற்கான வேலைத்திட்டம் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வு மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நான் யோசித்துள்ளேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை ஆரம்பித்து அந்த புனர்வாழ்வு நிலையத்தில் ஊடாக போதைக்கு அடிமையானோருக்கு விழிப்புணர்வு மற்றும் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் வடக்கில் இந்த போதைப்பொருள் தொடர்பான பிரச்னைக்கு தீர்வு எட்டப்படும்.

எமது இந்த நடமாடும் சேவை மூலம் நான் ஒரு விடயத்தை கண்டறிந்து உள்ளேன். வடக்கில் காணி பிரச்னை என்பது ஒரு பெரிய பிரச்னையாக காணப்படுகின்றது. இந்த விடயத்தை நாங்கள் கட்டாயம் ஜனாதிபதிக்கு தெரிவித்து அதற்கு என்ன செய்யலாம் என்ற விடயம் தொடர்பில் ஆராய்வேன்-என்றார். (அ-03)

## யாழில் நேற்று...

போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனை அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியானது.

இதன்படி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 15 பேரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## மாகாண சபை முறையை...

தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதியின் ஊடாக சங்கிலியன் தோப்பை (கிட்டு பூங்கா) சென்றடைந்தது.

இதன்போது, "தமிழர் தாயகத்தை சிங்கள - பௌத்த மயமாக்காதே!", "வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையும், சுயநிர்ணயத்தையும் அங்கீகரி!",

"தமிழினப் படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை நடத்து!", "பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு!" "அரசியல் கைதிகளை நிபந்தனையில் லாமல் விடுதலை செய்!", "வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும்", "ஆக்கிரமிப்புப் படைகளான சிறீலங்கா இராணுவத்தை தமிழர் தாயகத்திலிருந்து அகற்று!", "தமிழர்களின் நிலங்களை சுவீகரிப்பதை நிறுத்து!", "எங்கள் கடலில் அந்நிய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்து!", "முன்னாள் போராளிகளை சுதந்திரமாக வாழவிடு!", "தமிழ்ப் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து!" என்ற கோஷங்களை எழுப்பினர்.

கிட்டு பூங்காவில் பேரணி நிறைவடைந்ததைத் தொடர்ந்து அங்கு, "கிட்டு பூங்கா பிரகடனமும் நேற்று வெளியிடப்பட்டது. (ஐ)

## பலாலி...

ளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்ட கொரோனா சூழ்நிலை காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையமும் மூடப்பட்டிருந்தது. அதேபோல் தற்போது ஏனைய சில விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. பலாலி விமான நிலையமும் திறக்கப்படும். தற்போது பலாலி விமான நிலையத்தில் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. குறிப்பாக ஓடுபாதை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. மேலும் பல விமான சேவைகளுக்கான அபிவிருத்தி செயல்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டியதன் காரணமாக சற்று தாமதநிலை காணப்படுகின்றது. எனினும் அந்த வேலைகள் முடிந்த பின்னர் விரைவாக பலாலி விமான நிலையம் திறக்கப்படும்-என்றார். (அ-03)

## மாகாண சபை...

மறுக்கின்றார்கள். அவ்வாறான பிரேரணை வரவில்லை எனவும் தெரிவித்தனர். அத்துடன் அந்த செய்தி தவறானது என அமைச்சர்கள் எனக்கு கூறினார்கள். இதில் பத்திரிகை சொல்வது உண்மையா அமைச்சர்கள் சொல்வது உண்மையாக என்பது எனக்கு தெரியாது.

அத்துடன், வெள்ளிக்கிழமை காலையில் பயங்கரவாத தடைச்சட்டம் மறுசீரமைக்கப்படுகின்றது என ஒரு திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அது கண்துடைப்பு நாடகம் என்றுகூட சொல்ல முடியாது. ஏனெனில், அதில் எதுவுமே இல்லை. அதில் உள்ள ஒவ்வொரு விடயத்தையும் எடுத்து பார்த்தால் அதில் ஒரு மாற்றமும் கிடையாது.

ஆகவே வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் 'ரிபோம்' (Reform) என்ற ஆங்கில வார்த்தைக்கு அகராதியில் புதிய விளக்கம் கொடுக்கப்படவேண்டியுள்ளது என தெரிவித்திருந்தேன். அவர் சிரித்து விட்டு எங்கோ ஓர் இடத்தில் ஆரம்பிக்க வேண்டும் என என்னிடம் தெரிவித்தார். எனினும், இது தொடர்பில் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை உயர்ஸ்தானிகராலயத்திற்கு நான் அறிவித்துள்ளேன் என்பதை அவருக்கு தெரிவித்தேன்.

இது தொடர்பாக உயர்ஸ்தானிகரின் அறிக்கையிலும் வரும் என நான் எதிர்பார்க்கின்றேன். இலங்கை அரசாங்கம் இவ்வாறான மோசமான செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது என்பதனையும் அவருக்கு தெரிவித்தபோது அவர் அதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை - என்றார். (ஐ)

## ஐ. நா. மனித...

மேலும், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படும் பிரச்னை தற்போது பூதாகாரமாக மாறியிருந்கின்றது. இது தொடர்பாக சில பொது அமைப்புக்கள் ஏனைய கட்சிகளுடன் இணைந்து பொது வேலைத்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தவேண்டும் என கலந்துரையாடியுள்ளோம். இந் நிலையில், அனைவரும் ஒன்றிணைந்து எமது நிலங்கள் அபகரிக்கப்படுவதை தடுப்பது எமது பிரதான கடமையாக கருதுகின்றோம்.

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறும் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் எழுத்துமூலான அறிக்கையை உயர்ஸ்தானிகர் அலுவலகம் வெளியிடும். மார்ச் 3 ஆம் திகதி இலங்கை தொடர்பாக ஒரு ஆய்வு இடம்பெறும். அதற்கு உதவியாக இன்றைய சூழலை அவர்கள் அறியும் முகமாக தமிழ் அரசுக் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடனும் ஏனைய பங்காளி கட்சிகளுடனும் இணைந்து ஆவணமொன்றை தயார் செய்கின்றோம். மிக விரைவில் அதற்கு இணக்கம் காணப்பட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கடிதமாக இரா. சம்பந் தனின் ஒப்பத்தோடு அனுப்பி வைக்கப்படும் -என்றார். (ஐ)

## நாடு முழுவதும்...

ஹேரத் தெரிவித்தார்.

ஒமைக்ரோன் வைரஸ் தொற்றுப்பரவல் வேகமாக தாக்கத்தை செலுத்தி வருகின்ற நிலையில், சுகாதார வழிமுறைகளில் எவ்வாறான மாற்றங்களை முன்னெடுக்க நேரிடும் என்பது குறித்தும், அடுத்த கட்ட அச்சுறுத்தல் நிலைமைகள் குறித்தும் தெளிவுபடுத்தும் போதே அவர் இதனை கூறினார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கும் பி. சி. ஆர் பரிசோதனைகளில் அதிகளவான ஒமைக்ரோன் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். எனவே, தடுப்பூசி மூலமாக மட்டுமே எம்மால் நிலைமைகளை கட்டுப்படுத்த முடியும். இரண்டு தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்ட சகலரும் மூன்றாம் தடுப்பூசியை கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

## டெங்கு அபாய...

பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, கொழும்பு, கம்பகா, புத்தளம், களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு டெங்கு பரவும் அபாய பகுதிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

ஜனவரி மாதத்தின் மூன்றாம் வாரத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே கண்டறியப்பட்டுள்ளனர். இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 411 பேர் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, கம்பகாவில் 305 பேரும், களுத்துறையில் 120 பேரும், குருநாகலில் 109 பேரும், புத்தளத்தில் 96 பேரும், காலியில் 83 பேரும், கண்டியில் 73 பேரும் கண்டறியப்பட்டுள்ளனர். (ஐ)

## நாவற்குழியில்...

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நொக்கி சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் ஏ-9 வீதி, நாவற்குழி பகுதியில் பேருந்தில் இருந்து இறங்கியுள்ளார்.

அங்கு இறங்கிய பெண் வீதியோரமாக இருந்த மண்பிட்டியில் கால் வைத்த போது கால் தடுமாறி வீதியில் விழுந்துள்ளார். குறித்த பெண் வீதியில் விழுந்ததை கவனிக்காத பேருந்து அங்கிருந்து புறப்பட்டபோது, அதன் பின்பக்க சில்லு தலைமீதேறியது. இதில் அந்தப் பெண் தலைநசியுண்டது.

அங்கிருந்து, வாகனம் ஒன்றின் மூலம் அந்தப் பெண்ணை சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும், அவர், ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு Eelanadu

## விசேட தடுப்பூசி வேலைத்திட்டம் எதிர்வரும் வாரங்களில் ஆரம்பம்

### இராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

எதிர்வரும் வாரங்களில் விசேட தடுப்பூசி வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்று தெரிவித்த இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, அதற்கமைய பூஸ்டர் டோஸ் வழங்குவதற்கான நடமாடும் தடுப்பூசி மையங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தியத்தலாவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது மேலும் அவர் தெரிவித்தாவது,

கடந்த இரண்டு நாட்களாக கொரோனா தொற்று அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், எனவே இதுவரை பூஸ்டர் டோஸ் பெறாதவர்கள் விரைவில் அதனை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தடுப்பூசி போடுவதற்காக விசேட தடுப்பூசி நிலையங்களை ஆரம்பிக்க இலங்கை இராணுவத்தினர் உட்பட நாட்டின் முப்படையினர் பயன்படுத்தப்பட்டனர் என்று இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.





## நீதிக்கான அணுகல் நடமாடும் சேவை யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 31

நீதி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் "நீதிக்கான அணுகல்" செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்துடனான கலந்துரையாடல் நிகழ்வு நேற்றுக் காலை யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஒருக்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன், பிரதமரின் இணைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், நீதி அமைச்சின் செயலாளர் பி.கே. மாயாதுன்ன, நீதி அமைச்சின் மேலதிக செயலாளர், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது, பல்கலைக்கழக சமூகத்தின் கேள்விகளுக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் பி.கே. மாயாதுன்ன ஆகியோர் பதிலளித்தனர். (அ)

## தொழில் சங்கங்களை அடக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது

### எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 31

தொழில் சங்கங்களை அடக்குவதற்கும், வேலை நிறுத்தங்களை தடுக்கவும் அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக கண்டிப்பதோடு, இதற்கு எதிராக இலக்கணக்கான மக்களுடன் வீதிக்கு இறங்கி போராடுவதற்கும் தயாராகவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கெக்கிராவை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

நாட்டின் வளங்களை நடு இரவில் விற்கும் அரசாங்கம், தொழிலாளர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் பக்கமே நிற்கும். கடந்த தேர்தல் மேடைகளில் எமது எதிர்தரப்பு வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய போலியான வாக்குறுதிகளை நம்பி பெருமளவான மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை தடை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியக்கிடைத்துள்ளது. இது முற்றிலும் ஜனநாயகத்திற்கு முரணான நடவடிக்கை ஆகும். இந்த நடவடிக்கைகள் ஊடாக நாட்டுக்குள் பேசுவதற்குக் கூட தடையை விதிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமையும் சுதந்திரமும் காணப்படுகிறது. அதனை முடக்குவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது என்றார். (ஐ)

## கொரோனா தொற்றால் மேலும் 20 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 31

நாட்டில் மேலும் 20 பேர் கோவிட்-19 தொற்றினால் உயி ரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால், நேற்று முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டதாக, அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கோவிட்-19 தொற்றினால் மரணித்தோ ரின் மொத்த எண்ணிக்கை 15,420 ஆக உயர்வடைந்துள்ளது. (அ)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தொற்று

கொழும்பு, ஜன. 31

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள கொட்டாவ இடைமாற்றில் பணிபுரிந்த 15 காசாளர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொட்டாவ இடைமாற்றத்தின் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழையும் வாகனங்களுக்கான அனுமதி சீட்டு வழங்கப்படமாட்டாது. (அ)

## ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தேசிய மாநாடு மட்டக்களப்பில்!

மட்டக்களப்பு, ஜன. 31

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தேசிய மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பில் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

கோவிட் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக மாவட்டங்களிலிருந்து குறைந்தளவான உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இந்த தேசிய மாநாடு ஒழுங்கு நடைபெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தேசிய மாநாட்டை தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தலைவர் இரா. சிறிராஜ ராஜேந்திரா மற்றும் பொதுச் செயலாளர் இரா. ஜீவன் ராஜேந்திரன் போன்றோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்

தேசியவாதம் பேசுவேருக்கு எமது கட்சி சிறந்த பதில் வழங்கியுள்ளது எனவும் பிரதேச ரீதியாக பிளவுபட்டிருக்கும் சமூகங்களை ஒருங்கிணைப்பதற்கு ஈரோஸ் அமைப்பு முன்னின்று உழைக்கும் எனவும் இதன்போது அவர்கள் கூறினர். (ஐ)

## படுகொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு கொரோனா

அம்பாறை, ஜன. 31

சாய்ந்தமருது பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவரது ஜனாஸா மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் அமைந்துள்ள மஜ்மா நகர் கொவிட் மையவாடியில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

சாய்ந்தமருது-15 ஆம் பிரிவு புதுப்பள்ளி வீதியிலுள்ள ஒழுங்கையில் அமைந்துள்ள வீடொன்றில், தனிமையில் வசித்து வந்த 78 வயதுடைய சுலைமான் செய்யது முஹாரி என்பவர் கடந்த வியாழக்கிழமை அதிகாலை கொலை செய்யப்பட்டு, அவர் வசமிருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டிருந்தன.

அவரது உடலில் இருந்து பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை நேற்று முன்தினம் மாலை கிடைக்கப் பெற்றதாகவும் அதில் அப்பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும்அவரது புதல்வர் அலியார் சௌபர் தெரிவித்தார்.

இதையடுத்தே தமது தாயின் ஜனாஸா மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

அதேவேளை, கொலையாளி இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், இச்சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள், குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சாய்ந்தமருது பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## உயர்தரப் பரீட்சை நடைபெறும் போது மின் துண்டிப்பை ஏற்படுத்தவேண்டாம்!

கொழும்பு, ஜன. 31

உயர்தரப் பரீட்சை நடைபெறும் போது மின் துண்டிப்பை ஏற்படுத்த வேண்டாம் என சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 7ஆம் திகதி முதல் மார்ச் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஹோமாகம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே கல்வி அமைச்சர் இதனை தெரிவித்தார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கோடியில் ஒருவன்,
எம்.ஜி.ஆர் .மகன்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் நேரம்
6.30 மணி : நலந்தானா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு